பக்கங்கள் :எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 15 வெள்ளிக்கிழமை (29.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 212

# தமிழர்கள் சொந்த விவகாரங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பரந்த அதிகாரம் வழங்கப்பட வேண்டும்



## அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் பௌச்சர் நோர்வேயில் கருத்து

ஒஸ்லோ, ஜூன் 29

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரே நாடு என்ற அடிப்படையில் அமைய வேண்டும். அந்தத் தீர்வில், தமிழர்கள் தமது சொந்த விவகாரங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் முறையிலான ஒரு தீர்வு குறித்து இணைத் தலைமை நாடுகள் இப்போது ஆராய்ந்து வருகின்றன.

அதனை அடைவதற்கு இலங்கையில் தமிழருக்கும் இடமுண்டு என்பதனைக் காட்ட வேண்டும். அவ்வாறு காட்டுவதற்கு அனைத்துத் தமிழ்ச் சமூகத்தினருடனும் நாம் நெருக்கமுறச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு அமெரிக்காவின் உதவி ராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் பௌச்சர் நோர்வேயில் வெளியாகும் ''டக்ஸா விஷன்'' (Daga-visen) என்ற பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் அவர் இந்தச் செவ்வியை வழங்கினார்.

தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கும் ஒரு தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். விடுதலைப் புலிகள் அதற்கான பிரதிபலிப்பை வெளியிடுவதற்கு தயாராக இருக்க வேண்டும்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் குண்டுவீச்சு!

கொழும்பு, ஜூன் 29

இலங்கை விமானப்படையின் 'ஜெற்' குண்டுவீச்சு விமானங்கள் வன்னியில் முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணியில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தியிருக்கின்றன.

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் இரண்டு தளங்கள் மீது குண்டுவீச்சு நடத்தப் பட்டிருக்கிறது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித் திருக்கிறார்.

இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட சேத விவரங்களை விமானப்படை வெளியிடவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தும் இது குறித்து உடனடியாக தகவல் வெளியிடப்படவில்லை.

(சி)

## 'தினக்குரல்' செய்தியாளர் மீது விமானப்படையினர் தாக்குதல்!

### பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் விடுவிப்பு

கொழும்பு,ஜூன் 29

'தினக்குரல்' பத்திரிகையின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் கே.பி. மோகன் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் வைத்து விமானப்படையினரால் நையப்புடைக்கப்பட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் செய்தி திரட்டுவதற்காகச் சென்றபோதே அவர் வழியில் இவ்வாறு தாக்கப்பட்டார்.

ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்பிதழுடனேயே அவர் அங்கு சென்றார். எனினும், படையினர் அதனை உதாசீனப்படுத்தியுள்ளனர்.

மகா சங்கத்தினருக்கும் - ஜனாதிபதிக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதற்கான அழைப்புகள் சகல ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இந்த அழைப்புக் கடிதத்துடனேயே

(08 ஆம் பக்கம் பார்க்க)

### ஊடகவியலாளர்களைச் சிக்கலில் மாட்ட வைக்கும்

## குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீளக் கொண்டுவர அரசு முஸ்தீபு!

கொழும்பு, ஜூன் 29

ஊடகச் செய்திப் பொறுப்பாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் போன்றோர் மீது கிரிமினல் குற்றப் பொறுப்பைச் சுமத்த வழிவகுக்கும் குற்றவியல் அவதூறு சட்டத்தை (Criminal Defamation Law) மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராகி வருகின்றார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2002இல் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசினால் இல்லாதொழிக்கப்பட்ட இச்சட்டத்தை அவசர அவசரமாக மீண்டும் கொண்டு வந்து, ஊடகங்களை அடக்கி ஒடுக்கும் முயற்சியில் அரசுத் தலைமை ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அவதூறு குற்றச்சாட்டுகளின்போது ஊடகவியலாளர்களைச் சிவில் குற்றத்துக்கு மேலதிகமாக கிரிமினல் குற்றத்துக்கும் உள்ளாக்க

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வலந்தலை கடற்கரையில் ஒதுங்கிய சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஜூன்29

காரைநகர், வலந்தலைக் கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க இச்சடலம் நேற்றிரவு வரை அடையாளம் காணப்படவில்லை. பொலிஸார் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

ஊர்காவற்றுறை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு ஆஸ்பத்திரியில் சடலத்தைப் பார்வையிட்டு, விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை இனங்கண்டு உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் இனங்காணாத பட்சத்தில் அரச செலவில் அடக்கம் செய்யும் படியும் பதில் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(அ-1)

## நாவாந்துறையில் கிளைமோர் தாக்குதல்; அதிகாரி ஒருவரும் சிப்பாயும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்.நகருக்குச் சமீபமாக, நாவாந்துறைப் பகுதியில் வைத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட இரு படையினர் பலியாகினர். மோட்டார் சைக்கிளில் சென்ற படையினரை இலக்கு வைத்தே இந்தக் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவ அதிகாரி ஒருவரும் சிப்பாய் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக ஊடக தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலையடுத்து அப்பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதலை இராணுவத்தினர் மேற்கொண்டனர். (அ-1-50-78)

## நாகபூஷணி சப்பரத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள்

(நயினையில் இருந்து நம்பி)

நயினாதீவு,ஜூன்29

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலய சப்பரத் திருவிழாவில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டனர். இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று மாலையிலும் அதற்குப்பின்னருமாக சுமார் ஐயாயிரம் பக்தர்கள் வந்ததாக உத்தேசமாக மதிப்பிடப்பட்டது.

பக்திபூர்வமாக நேற்றிரவு நடைபெற்ற சப்பரத் திருவிழாவை அவர்கள் தரிசித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்தபக்தர்களைவிட ஏனைய தீவுகளில் இருந்தும் சுமார்

(08 ஆம் பக்[கம் ப]ார்க்க)

## நோர்வேப் பிரதிநிதிகளின் பயண வசதி: இணைத் தலைமைக் கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 29

இலங்கை நெருக்கடி தொடர்பாக ஒஸ்லோவில் கூடி விவாதித்திருக்கும் இணைத் தலைமை நாடுகள், அரசு-புலிகள் இடையே அனுசரணைப் பணியில் ஈடுபட்டுவரும் நோர்வேயின் பிரதிநிதிகள் எதுவித தடை, தாமதங்கள், அச்சுறுத்தல்கள் இல்லாது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று வருவதற்கு வசதி செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆராய்ந்திருக்கின்றன எனத் தகவல் வெளியாகி இருக்கிறது.

நோர்வேப் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று வருவதற்கான பயண வசதிகளை வழங்கவேண்டும் என்று இலங்கை அரசிடம் கோருவதற்கு அந்நாடுகள் தீர்மானித்துள்ளன என்றும் அறியவந்துள்ளது.

இலங்கையின் சமாதான செயற்பாடுகளுக்கு மீண்டும் புத்துயிர்வழங்கும் பொருட்டு நாட்டுக்கு வருகைதரும் நோர்வே சமாதானத் தூதுவர்கள் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்குத் தேவையான பிரயாண வசதிகளை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு அறிவிப்பது என ஒஸ்லோ நகரில் கூடிய இலங்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இணைந்து செயற்படுவதற்கு ரணில் - மங்கள இணக்கம்

கொழும்பு, ஜூன் 29

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஸ்ரீல.சு.க. மக்கள் பிரிவுக் கட்சியின் ஏற்பாட்டாளர் மங்கள சமரவீரவிற்குமிடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

கொழும்பு -07, கேம்பிரிஜ்ட் டெரஸில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின்சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் ருக்மன் சேனாநாயக்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜோஸப் மைக்கல் பெரேரா ஆகியோரும் -

ஸ்ரீல.சு.க. மக்கள் பிரிவின் சார்பில் முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி மற்றும் டிரான் அலஸ் ஆகியோரும் - இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இரண்டு மணிநேரத்திற்கும் மேலாக இடம்பெற்ற இச்சந்திப்பில் தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் விசேடமாக அரசு முன்கொண்டு செல்லும் அரசியல் நடவடிக்கைகள், யுத்தம் போன்றனவை பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் ஒரு போதும் செயற்படமாட்டாது - ஜனாதிபதி



கொழும்பு,ஜூன் 29

அரசாங்கம் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படப் போவதில்லை. இப் படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் சமாதான முன்னெடுப்புகள் குறித்து மகாசங்கத்தினருக்கு விளக்கம் அளிக்கும் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

அங்கு வைத்து ஜனாதிபதி தெரிவித்ததாவது:-

நாட்டில் யுத்தம் இடம்பெறுகின்ற அதேவேளை, அபிவிருத்தியும் முன்னெடுத்துச் செல்லப்படும். நாட்டின் பொறுப்பை என்னிடம் கையளிப்பதற்கு முன்னின்று உழைத்தவர்கள் மகா சங்கத்தினர். மக்கள் முன்வைக்கப் படும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திற்கும், மாதகலிற்கும் இடையில் பயணத்தின்போது கணேசமூர்த்தி மதியழகன், மாதகல் வடக்கு, மாதகல் என்னும் விலாசமுடைய தேசிய அ. அட்டை (862021584v) மற்றும் விசேட அடையாள அட்டை ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.
(62311)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி ஐயாத்துரை பொன்னம்மா

மலர்வு 01.04.1922 — உதிர்வு 30.05.2007

கடந்த 30.05.2007 அன்று சிவபதமடைந்த எமது அம்மாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.06.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

லதா பவனம்,
இணுவில் மேற்கு,
இணுவில். (62310)

ஐ. ரவிச்சந்திரன்,
(மகன் - குடும்பம்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கமணி தம்பிப்பிள்ளை



கரந்தன் மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமணி தம்பிப்பிள்ளை 27.06.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - இலட்சுமி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சோதிலிங்கம் (கனடா), சுந்தரலிங்கம் (ஜேர்மனி), சிவலிங்கம் (கனடா), பஞ்சலிங்கம் (கனடா) காலஞ் சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவிந்திரன் (கனடா), சுந்தரலிங்கம் (லண்டன்), சற்குணலிங்கம் (கனடா), கமலாதேவி (கொழும்பு) ஆகியோரின் தாயும் ரோகிணி (லண்டன்), ஜெயமதி (கனடா), ஜெயா (கனடா) கந்தசாமி (கொழும்பு) ஆகியோரின் மாமியும் வினோத், அரவிந்த், நிசாந், சுரேந்தினி, மயூரன், திலீபன், தீபிகா, பிரதிகா, பிரதீபன், கஜானந்த், பாலகௌரி, மிருளாஜினி, ஜெசிந்தன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி.க.கந்தசாமி [மகள்],
கரந்தன். (62312)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு

*(ஓய்வு பெற்ற ஆசிரியர்)*



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 27.06.2007 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மீசாலை வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை- ஞானம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி- செல்லாச்சி தம்பதியினரின் மருமகனும் கனகாம்பிகை அம்மாளின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக்கணவரும் கதிர்வேல் (Engineer, கொழும்பு), ஞானச்செல்வி (University of Tuskegee USA), ஞானவேல் (University of Sheffield U.K), தங்கவேல் (Network Engineer, கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சரவண்முத்து மற்றும் மீனாட்சிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் உஷாயினி (Engineer, கொழும்பு), பரமேஸ்வரன் (University of Auburn USA), தர்சினி (U.K.) ஆகியோரின் மாமனும் மயூரனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.06.2007) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலாவித் தாழ்வு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி ஒழுங்கை, (சி.52781)
கச்சாய் வீதி, கொடிகாமம்.
தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## முத்துவேல் குகானந்தவேல் *(ஆசிரியர்)*



புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேல் குகானந்தவேல் மாஸ்டர் 27.06.2007 புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு- நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சின்னத்தம்பி- செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் பரிமளாதேவியின் கணவரும் பிரியா, பாமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி, கலைமணி (கனடா), சண்முகானந்தவேல் (வேல்சாமி) காலஞ்சென்ற யாழ்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவனேசன், ஜெகநாதன் (கனடா), சிவமலர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பரமேஸ்வரன், சுவிஸில் வசிப்பவர்களான மகேஸ்வரன், விக்கினேஸ்வரன், ஜெய்குமார், மஞ்சுளாதேவி ஆகியோரின் மைத்துனரும் குகேந்திரன் (U.K.), சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் மாமனும் பாலரூபி, ஜெகன், கஜன், ஜனனி (கனடா), விபுலானந்தி (கனடா) ஆகியோரின் தாய்மாமனும் சஞ்சீவ் (கனடா), சரண்சீவ் (கனடா), சைதீகா (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் பவிதனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (30.06.2007) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 93, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(திருமறைக்கலாமன்றம் எதிரே)
தகவல்:
திரு திருமதி. சிவனேசன்
கலைவாணி குடும்பம்
(62309)

## தடைதாண்டல் பரீட்சைக்கு முன்னோடி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள தடைதாண்டல் பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள், நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற உள்ளன.

கணக்காளர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ள இந்த முன்னோடி வகுப்புகளில் பரீட்சைக்குத் தோற்றுவோர் கலந்து கொள்ளமாறு கேட்கப்பட்டுள்ளது.

## யாழ். சிறைச்சாலை கைதிகளுக்கு பொக்குளிப்பான் நோய்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு பொக்குளிப்பான் நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேப்ப நிலை அதிகரித்துள்ளதே இதற்குக் காரணமாகும். இந்நோய் காரணமாக கைதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நோய் பாதித்த சிலருக்கு அது குணமடைந்திருப்பினும் ஏனையோரை பீடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-78)

## வவுனியா கணேசபுரத்தில் இளைஞனின் சடலம்

வவுனியா, ஜூன் 29

வவுனியா கணேசபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் தங்கேஸ்வரன் சுதாகரன் (வயது - 25) என அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

வவுனியா மாவட்ட நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டு பூர்வாங்க விசாரணையை மேற்கொண்டார். பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு பூவரசங்குளம் சென்று திரும்பும் வழியில் அடையாளம் தெரியாத நபர்களால் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(சி)

## இடமாற்றம்



இல. 342, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள மேனகா பிறிண்டேர்ஸ் இன்று (29.06.2007) வெள்ளிக்கிழமை தொடக்கம் இல. 68, கன்னாதிட்டி வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்பு: 021 222 9468
(62320) உரிமையாளர்.

## தவறிவிட்டது

மதவடி, கோப்பாய் மத்தி என்னும் முகவரியைச் சேர்ந்த மகாலிங்கம் கவிதரன் என்பவரது தேசிய அ. அட்டையும் (820091370v) வி.அ. அட்டையும் 26.06.2007 அன்று திருநெல்வேலி சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முக வரியில் இல்லது தொடர்பு கொள்ளவும் அல்லது ... என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(62324)

## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

# 185ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்




### கல்லூரித் தாயே வாழ்க!

வடமராட்சி மண்ணதனில் பருத்தித்துறைப் பதியினிலே
கலங்கரை விளக்காய் அமைந்திட்ட கல்வித்தாயே
ஆண்டுகள் பலவற்றையும் அழகாய் நிறைவு செய்து
அஞ்சா நெஞ்சம் கொண்டு வளர்ந்திட்ட தாயே

நிமிர்ந்த நற்பண்புகள் நின்று புகழ் பாடுதம்மா
நித்தமும் மலரும் நித்திய கல்யாணியே
தடைகள் எத்தனை எத்தனை வந்தபோதும்
தளராது நடை போடும் தாயே!

மண்ணில் நீ செய்யும் சாதனைகளால் - உனை
வாழ்த்தாத மாந்தரில்லை இம் மண்ணில்
இருள்புகுந்த எம் மாணவர் வாழ்க்கையதில்
இருளகற்றி ஞான ஒளியேற்றும் நிலமகளே

அன்றைய இருபத்து ஆறினிலே...,
கல்லூரி தாயே கலைத்தாயினால் நீயும் அரவணைக்கப்பட்டாய்
சத்தமின்றி சாந்தமுடன் இம் மண்ணதனில்
உன் சாதனைகள் மீண்டும் தொடர்கின்றன...

கல்லூரித் தாயவளே...!
வான்வரை வளரவேண்டும் உன் சேவை
அலைஅலையாய் மிளிரவேண்டும் - மீண்டும்
கடல் தாண்டி கட்டங்கள் அழிந்தாலும்
கல்லூரி காலமெல்லாம் புகழ் வீச வேண்டும்.

இ.கோகிலவாணி,
"ஒளியை நோக்கி" 2005

*185 ஆவது ஆண்டு விழா நடைபெறும் இந்நன்னாளிலே பாடசாலையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் பாடசாலை நல்வளர்ச்சியடைந்து எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்த கல்விச் சேவைகளை வழங்க எம்பெருமானை இறைஞ்சுகின்றோம்.*

மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.
பாடசாலைச் சமூகம்.
(ச.52775)

## மிருசுவில் வடக்கு கோயிற்குளம் அம்பாள் ஆலய தேர்த் திருவிழா

*மிருசுவில் வடக்கு கொட்டிகைப்பதி கோயிற்குளம் அம்பாள் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் கடந்த 21.06.2007ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பெருந்திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. இந்திரராசக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று (29.06.2007) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை (30.06.2007) சனிக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெற்று, மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளன.*

*தொடர்ந்து பண்டிதர் எஸ்.கே. தம்பு அவர்கள் தலைமையில் மஹோற்சவ பிரதமகுரு "சக்தி உபாசகதீரர்" சிவஸ்ரீ இந்திரராசக் குருக்கள் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார். அத்துடன் இளஞ்சைவப்புலவர் பரீட்சையில் அகில இலங்கையில் முதலாம் இடத்தில் சித்திபெய்திய மிருசுவில் வடக்கைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவனாகிய கமலநாதன் கைலைவாசன் அவர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.*

**அனைவரும் கலந்து அம்பாளின் அருள் பெறுவீராக!**

கோயில்குளம்
அம்பாள் ஆலயம்,
மிருசுவில் வடக்கு. (சி-527833)
ஆலய நிர்வாகிகள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் தம்பிப்பிள்ளை கந்தசாமி (பப்பா)

(இளைப்பாறிய சாலைப் பரிசோதகர் - இலங்கை போக்குவரத்துச் சபை, யாழ்ப்பாணம்)

மலர்வு 07.07.1925 — உதிர்வு 30.05.2007

*அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.06.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

தெல்லிப்பழை வீதி,
வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை
(62325)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரு.ஹாட்லிக் கல்லூரியில் தளபாடங்கள் பற்றாக்குறை

## இரு பாடங்களுக்கு ஆசிரியர்களும் இல்லை

கரவெட்டி,ஜூன்29

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தேவையான தளபாடங்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் கற்றல் நடவடிக்கைகளில பாதிப்பு ஏற்படுவதாகக் கல்லூரிச் சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பிரசித்தமான பாடசாலைகளில் ஒன்றாக ஹாட்லிக் கல்லூரி விளங்குகின்றது. இங்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கேற்ப தளபாடங்கள் இல்லை. இதனால் மாணவர்கள் நெருக்கடிக்கு மத்தியில் தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்கின்றனர். ஆசிரியர்களும் கற்பித்தல் நடவடிக்கைகளை சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொள்கின்றனர்.

இதேவேளை- இக்கல்லூரியில் உடற்கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களும் இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் எனக் கல்லூரிச் சமூகத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-70)

## கல்வியியல் முதுமாணி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் கல்வியியல் முதுமாணிப் பரீட்சைகள் எதிர்வரும் ஓகஸ்ட் 13 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்படிப்புகள் பீடத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

வவுனியா வளாகத்தில் கற்கை நெறியை மேற்கொண்டு வரும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பாடசாலையின் விவேகானந்தர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் நா.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி கலந்துகொள்வார். (203)

* * *

யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் அருட்சகோதரி எம்.ஜீவந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.குகதாசனும் கலந்துகொள்வர். (203-51)

* * *

நல்லூர் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 23 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (203-79)

* * *

அராலி மலரும் மலர்கள் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அராலி மேற்கு சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (203-79)

* * *

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்துகொள்வார். (203-86)

* * *

சர்வதேச மாக்ஸிச குழு நடத்தும் அமரர் மெரில் பெர்னாண்டோவின் நினைவு தினக் கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு வேம்படி வீதியில் உள்ள அகவிழி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் செ.சிவபாலன் நினைவுரை நிகழ்த்துவார். (203)

* * *

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் அருணகிரிநாத சுவாமி விழா நடைபெறவுள்ளது.

இதில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்புரை ஆற்றுவார்.

வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில் ஞானச்சுடர் மாதாந்த வெளியீடும் இன்றைய தினம் இடம்பெறும்.

சிவ ஆறுமுக ஸ்வாமி வெளியீட்டுரை நிகழ்த்த செஞ்சொற்செல்வன் இரா.செல்வவடிவேல் மதிப்புரை நிகழ்த்துவார். (203)

# புங்குடுதீவு வைத்தியசாலைக்கு டாக்டர் இல்லை; அவசர நோயாளர்கள் இரவு நேரங்களில் அவதி!

புங்குடுதீவு,ஜூன்29

புங்குடுதீவு வைத்தியசாலைக்கென டாக்டரோ மருத்துவமாதோ இல்லை. இதனால் பிரதேச மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் அவசர நோயாளர்கள் எந்தவித பராமரிப்புமின்றி அல்லற்படுகின்றனர்.

புங்குடுதீவு வைத்தியசாலை இராணுவ நடவடிக்கை காரணமாக 1991ஆம் ஆண்டு பூட்டப்பட்டது. தற்போது அவ்வைத்தியசாலை மீண்டும் திறக்கப்பட்டு ஊழியர்களுடன் மட்டும் இயங்கி வருகின்றது. டாக்டர், மருத்துவமாது என எவரும் இங்கு பணியாற்றுவதில்லை.

மருத்துவமாது கூட இல்லாததால் கர்ப்பிணித் தாய்மார் பெரும் சிரமப்படுகின்றனர்.

திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பகலில் மட்டும் டாக்டர் திருநாவுக்கரசு புங்குடுதீவு வந்து சேவையாற்றி வருகின்றார்.

பிரதேச மக்களின் நலனில் அக்கறை கொண்டு சுகாதாரப் பணிப்பாளர் இப்பிரதேசத்துக்கென டாக்டர் ஒருவரையும் மருத்துவமாது ஒருவரையும் நியமிக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (202)



இம்மாத முற்பகுதியில் கண்காட்சியூடான புற்றுநோய் விழிப்புணர்வும் மருத்துவ ஆலோசனையும் குடாநாட்டின் பிரபல பாடசாலைகளில் 6 நாள்கள் நடத்தப்பட்டன.

வடமராட்சிப் பிரதேசத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வை வல்வை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி எஸ்.மயிலேறும்பெருமாள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதை முதலாவது படத்திலும் - மாணவர்களுக்குப் புற்றுநோய் தொடர்பான சலனப் படம் காட்டப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைகளுக்கு இரண்டரை லட்சம் ரூபா மாகாண சபையால் ஒதுக்கீடு

நல்லூர், ஜூன் 29

யாழ். மாநகராட்சி மன்றத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கென வடக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

19 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 2 லட்சத்து 61 ஆயிரத்து 593 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீட்டில் சனசமூக நிலைய நன்கொடையாக 'ஏ' தர சனசமூக நிலையங்கள் 42 இற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் 'பி' தர சனசமூக நிலையங்கள் 25 இற்கு 52 ஆயிரத்து 500 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பொது நூலகத்தின் புத்தகக் கொள்வனவுக்கென 30 ஆயிரம் ரூபாவும் தாய் - சேய் நல நிலையங்கள் 11 இற்கு 66 ஆயிரம் ரூபாவும் - சுகாதார சேவைகளுக்கென 14 ஆயிரத்து 93 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# காரைநகர் பிரதேச செயலகம் நடத்திய கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

காரைநகர் பிரதேச செயலகம் தேசிய கலை இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு நடத்திய கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. அதன் விவரம் வருமாறு:-

**கட்டுரை**

*சிரேஷ்டபிரிவு:* ஞானசோதி செல்வகுமாரி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), கஸ்தூரி ஸ்ரீஸ்கந்தராசா (யாழ்ற்ரன் கல்லூரி), அனுசா சந்திரன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), சதாசிவம் சிவதாஸ் (கலாநிதி ஆ.தியாக ராசா ம.ம.வி).

*கனிஷ்டபிரிவு:* இராசரத்தினம் இராசேஸ்வரி (காநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), நித்தியானந்தம் தவறஞ்சன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), கஜனி வரதராசா (யாழ்ற்ரன் கல்லூரி), பஞ்சலிங்கம் கலைச்செல்வி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்).

**கவிதை**

*சிரேஷ்ட பிரிவு:* சாம்பவி மயில்வாகனம் (யாழ்ற்ரன் கல்லூரி), கோகிலா கந்தசாமி (யாழ்ற்ரன் கல்லூரி), சதாசிவம் சிவதாஸ் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

*கனிஷ்டபிரிவு:* சிவரஞ்சினி சிவானந்தராசா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), இராசரத்தினம் இராசேஸ்வரி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), லக்சியா ஸ்ரீஸ்கந்தராசா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

**சிறுகதை**

*மட்டுப்படுத்தப்பட்ட போட்டி:-* கோகிலவாணி சுந்தரலிங்கம் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), கு.நிஷாகரன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), பிரியதர்சினி இரகுநாதன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

*திறந்த போட்டி:-* எம்.ஆனந்தராசா (யாழ்ற்ரன் கல்லூரி), கந்தையா தவரஞ்சனா (பொன்னாவளை களபூமி, காரைநகர்).

**பாடல்:**

*திறந்த போட்டி:-* ராஜ்குமார் ஞானசோதி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), செல்வகுமாரி ஞானசோதி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), றஜிதா சடாச்சரம் (கலாநிதி ஆ.தியா கராசா ம.மவி). (203-73)

## சுகாதாரமற்ற 'சர்பத்'; வியாபாரிக்கு அபராதம்

நல்லூர்,ஜூன்29

சுகாதாரமற்ற முறையில் 'சர்பத்' விற்பனை செய்த வியாபாரி ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

அண்மையில் யாழ்.மாநகர சபையின் குருநகர் பொது சுகாதாரப் பிரிவில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது சுகாதாரமற்ற வகையில் 'சர்பத்' தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. குறிப்பிட்ட வியாபாரிக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. (202-111)

## சண்டிலிப்பாய்ப் பகுதியில் முட்டை விலை உயர்வு

வலி.தென்மேற்கு,ஜூன்29

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் முட்டையின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் 20 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை ஒன்று தற்போது 25 ரூபாவாகக் கடைகளில் விற்கப்படுகின்றது.

கோழித்தீனின் விலை அதிகரித்துள்ளதாலும் கோழிகள் வளர்ப்போர் எண்ணிக்கை குறைந்து வருவதாலும் முட்டையின் விலையைப் பண்ணையாளர்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (203-135)

## வடமராட்சி கிழக்கிற்கு பிரதேச மலர் வெளியீடு

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரச அதிபர் பிரிவுக்கென பிரதேச மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

பிரதேசத்தின் கலை, பண்பாடு, தொழில், பாரம்பரியம் என்பன உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய ஆக்கங்கள் இந்த மலரில் வெளியிடப்படவுள்ளன.

இந்தப் பிரதேச மலர் வெளியீடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு குடத்தனை அ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள் ளது.

மலர்க்குழு, மலருக்கான ஆலோசனைக் குழு என்பன இந்தக் கூட்டத்தில் வைத்து தெரிவுசெய்யப்படவுள்ளன. (202-160)

## உள்ளூராட்சி வாரம்

வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்படவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சி.புண்ணியமூர்த்தி இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

'நாளைய தினம் சிறந்ததாக அமைய உள்ளூராட்சியை வழி நடத்தல்' எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்படவுள்ளது.,

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய சகல மாவட்டங்களிலும் உள்ளூராட்சி வாரத்தை சிறப்புற நடத்துமாறு சகல பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கும் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (202-95-160)

# கட்டுமானத் திட்டங்களுக்கான மணல் விநியோகம்: புதிய நடைமுறைகளை செயலகம் அறிவித்துள்ளது

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.மாவட்டத்தில் அரச மற்றும் சர்வதேச நிதியுதவியுடன் மாவட்ட செயலக, பிரதேச செயலகங்களின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டுமானத் திட்டங்களுக்கு மணல் பெறுவதற்கான அனுமதியை யாழ். செயலகம் வழங்கிவருகின்றது.

வீட்டுத்திட்டத்தை முன்னெடுக்கும் பயனாளிகள் தேவையான மணலுக்கான விண்ணப்பத்தை கிராம சேவையாளர் மூலமாக பிரதேச செயலரின் சிபார்சுடன் செயலக மணல் விநியோக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் கையளித்து அனுமதியைப் பெறலாம்.

இவர்களிடம் ஓர் உழவு இயந்திரம் சுமைக்கு ஆயிரம் ரூபாவும் அனுமதிப் பத்திரத்திற்கு 100 ரூபாவும் அறிவிடப்படும்.

அரச மற்றும் தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் நிதியுதவி செய்யும் அமைப்பின் திட்டப் பணிப்பாளரிடம் உறுதிப்படுத்தி குறிப்பிட்ட திட்டம் இடம்பெறும் பிரதேச செயலர் பிரிவின் செயலரின் சிபார்சின் மூலம் மாவட்ட செயலகத்தின் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவர்கள் ஓர் உழவு இயந்திரச் சுமைக்கு ஆயிரத்து 300 ரூபாவும் அனு மதிப்பத்திரத்திற்கு 100 ரூபாவும் செலுத்த வேண்டும். ஒரு லொறி சுமைக்கு 3 ஆயிரத்து 900 ரூபாவும் அனுமதிப்பத்திரத்திற்கு 100 ரூபாவும் செலுத்த வேண்டும்.

இந்த மணல் விநியோகத்தின்போது குடத்தனையிலிருந்து உரிய இடங்களுக்கு எடுத்துச்செல்வதற்காக லொறிக்கான போக்குவரத்துச் செலவை மாவட்ட செயலக மும் யாழ். மாவட்ட தனியார் பாரவூர்திகள் சங்கமும் நிர்ணயித்துள்ளன.


அதன்படி சாரதி சம்பளமாக 750 ரூபாவும் கிளீனர் சம்பளமாக 500 ரூபாவும் டீசல் மற்றும் ஏனைய செலவுக்காக 2 ஆயிரம் ரூபாவும் 10 கிலோமீற்றர் தூரத்திற்கு சென்று வருவதற்கு அறவிடப்படுகின்றது.

மணல் ஏற்றியிறக்குவதற்கான கூலியாக ஆயிரத்து 250 ரூபாவும் அறிவிடப்படும்.

குறிப்பிட்ட அளவிற்கு மேல் லொறிக்கு கூலி அறவிடும் லொறிகளுக்கான அனுமதி எவ்வித அறிவித்தலும் இன்றி இரத்துச் செய்யப்படும் என யாழ்.அரச அதிபர் கே. கணேஸ் அறிவுறுத்தியுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்கும் புவனேஸ்வரி பீடம்



சக்தி வழிபாடு உலகின் பல பாகங்களிலும் பரந்த ஒரு வழிபாட்டு முறையாக விளங்கி வருகின்றது. அத்தகைய சக்தி வழிபாட்டுக்குரிய தலங்களில் இலங்கையின் வடபுலத்தில் சப்ததீவுகளில் ஒன்றாகிய நயினாதீவும் ஒன்றாகும். சமுத்திரம் மத்தியிலே தளிர் போல் விளங்கும் மணித்தீவிலே அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் அமைந்திருப்பதாக மகாகவி காளிதாசன் கூறியுள்ளார்.

சக்தியின் அருட் பொலிவுற்ற இடங்களே சக்தி பீடங்களாகும். இவ்வுலகிலே இத்தகைய சக்தி பீடங்கள் அறுபத்து நான்கு என்றும் இன்னும் சிலர் ஐம்பத்தொன்று என்றும் அவற்றில் பதினெட்டு மிக மிக விசேடமானவை என்றும் விளக்குவர். மதுரையிலே மீனாட்சியாகவும் காஞ்சியிலே காமாட்சியாகவும் காசியிலே விசாலாட்சியாகவும் நாகபட்டினத்திலே நீலாய தாட்சியாகவும் உறையும் மாபெரும் சக்தியே நயினையிலே நாகாம்பிகையாகவும் உறைகின்றாள்.

சக்தி வழிபாட்டின் சிறப்பையும் அவசியத்தையும் மட்டுமன்றி சக்தியை வழிபடும் முறையையும் போதிக்கும் சாக்த சமய சம்பிரதாயப்படி உலகில் உள்ள சக்தி பீடங்களில் காஞ்சிகாமாட்சி ஆலயத்தை காமகோடிபீடம் எனவும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தை சியாமளபீடம் எனவும் அழைப்பது போல நயினை நாகபூஷணி ஆலயத்தை புவனேஸ்வரிபீடம் எனவும் போற்றப்படும் பெருமை ஈழத்துக்குரியதே. அனலைதீவில் இப்பொழுது விளங்கும் நாகதம்பிரான் திருமூர்த்தியானது ஒல்லாந்தர் இக்கோவிலை அழிப்பதற்கு முன் இங்கு இருந்தது என்றும் நம்பப்படுவதால் இது நாகேஸ்வரம் எனவும் அழைக்கப்பட்ட தென்பர். புராதன வழிபாட்டு இடமாக அமைந்த இக்கோவிலின் ஆரம்பநிலை பற்றி நாம் இப்போது அறியத்தக்க சான்றுகள் கிடைத்தில. தான்தோன்றியாக மண்ணின் றும் தோன்றியருளிய அம்பிகையின் திருப்படிமத்தை இந்தியாவில் இருந்து வந்த நயினார் பட்டம் என்னும் அந்தணர் பூசித்தார் சிலப்பதிகாரச் செட்டிமார் வியாபார நிமித்தம் இங்கு வந்து போயினர் அக்காலத்தில் நயினாதீவுக்கு அண்மையிலுள்ள புளியந்தீவில் இருந்து நாகமொன்று அம்பாளை அர்ச்சிக்கத் தினந்தோறும் வந்து போவது வழக்கம் அவ்வாறு வரும் போது அம்பாளின் அர்ச்சனைக்குரிய பூக்களை புளியந்தீவில் இருந்து கொண்டு வருவது வழக்கம். ஒரு நாள் வழக்கம் போல பூவுடன் கடல் வழியாக வந்த நாகத்தைத் தாக்க முயன்ற கருடனை அவ்வழியே வந்த செட்டியார் விலக்கி கப்பலில் இருந்த திரவியங்களைக் கரையில் சேர்ப்பித்து கோவிலைச் செப்பனிட்டு நயினார் பட்டம் என்னும் பிராமணரைப் பூசைக்கு நியமித்தார். அவர் பெயர் நிலைத்து வந்து இத்தீவுக்கே நயினாதீவு என்று அழைக்கப்படுகின்றது என்று கூறுவர்.

இதன் அறிகுறியாக இன்றும் பாம்பு சுற்றுக்கல்லும் கருடன் கல்லும் கோயிலின் வடக்கே உள்ள கடலில் நீருக்கு மேலால் இப்பொழுது பார்க்கின்றோம். நாகத்தால் பூசிக்கப்பட்ட அம்மையே நாகபூஷணி என்னும் பெயர் பெற்றாள். ஒல்லாந்தர் காலத்தில் இக்கோயில் இடிக்கப்பட்டு சூறையாடப்பட்டது. அத்தருணத்தில் அம்பாளின் திருவுருவம் கோயி லின் வடமேற்கில் நின்ற

**சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்றாகும்.**

ஆலமரப்பொந்தில் மறைக்கப்பட்ட போது ஏறக்குறைய 45 வருடங்களுக்கு முன் இம்மரம் பட்டு அழிந்தது. கோயில் இடிக்கப்பட்ட போது ஏழு திரு வீதிகளும் செப்புத் தேர், பவளத்தேர் இருந்தன வெனவும் இவை மக்களால் கடலில் தள்ளி விடப்பட்டன என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இதன் பின்னர் இக்கோவில் வழிபடுநரின் உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டு காலத்துக்குக் காலம் பெருப்பிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

- சு.பா.காசிநாதன்

## நமக்கொரு தீர்வுகொண்டு தேரேறிவருக!

போரை மண்ணில் தீர்த்து வைக்க தேரிலேறி வருக
புதிய வாழ்வை மலரவைக்க தாயே தேரிலேறி வருக
சேரும் பகையை விலக்கி வைக்க தேரிலேறி வருக
செல்வ வாழ்வை செழிக்க வைக்க தாயே தேரிலேறி வருக
கோரும் உரிமை கிடைக்க வைக்க தாயே தேரிலேறி வருக
கொள்கை காத்து உழைக்க வைக்க தேரிலேறி வருக
பாரில் மக்கள் நலனைக் காக்க தாயே தேரிலேறி வருக
பாங்கான தீர்வுதந்து எம்மை ஆள தேரிலேறி வருக

- காரை எம்.பி. அருளானந்தன்.

## பேணிக்காத்துத் துயர்துடைப்பாள்

வெள்ளம் போல அடியார் கூட்டம்
வீதி யெங்கும் அலையாய் மோதும்
கள்ளம் இல்லா உள்ளத் தோடு
காண வருவார் அம்பாள் தேரோட்டம்
வள்ளல் போல அருள்வெள் ளமதனை
வாரி வழங்கும் நயினை யம்மா
பிள்ளை யாக நம்மை எல்லாம்
பேணிக் காத்துத் துயர்து டைப்பாள்

- வ.யோகானந்தசிவம்

## ஏற்றமுறுவாள் தேரினிலே!

சுற்றி வரு நாகம் வட்ட படுக்கையாகி
படம் விரித்து நிழலென குடைபிடிக்க
உற்றங் கிருப்பாள் நயினையாளின் அருள்நாடி
கடல் தாண்டி வருமடியார் அருள் வரம்
பெற்றிட வாசல் குவிந்திடுவர் மனம் கனிந்தவர்
அலையின் ஒலியென அம்பாளே என்றியம்பி
பொற்பதியாள் பாதம் பணிந்து பரவசமாகி
புகழ்பாடித் தொழுது கரம் ஏந்தியே
நிற்பார் நன்னிடையாள் விழி மலரக் கண்டு
செப்பிடும் அடியவர் சூழ்துயர் குறைகேட்டு
நற்பதத்தாள் நற்கருனை முகத் தெழில் கோலமுடன்
நலமுற வந்தருளீந்து ஏற்றமுறுவாள் தேரினிலே.

- அல்லையூர் சிவநேசன்.

# கடற்றொழில் கிராமங்களின் அபிவிருத்திக்கு கோழி வளர்ப்புத் திட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்29

பசுபிக் ஆசிய மூலவள நிறுவனம் (பார்க்) சுழிபுரம் மேற்கு, தும்பளை கிழக்கு, வேலணை துறையூர் ஆகிய கடற்றொழில் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கோழி வளர்ப்புத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

அந்தந்தக் கிராமங்களின் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பிட்ட கிராமங்களில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்கள் பயனாளிகளாக இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்படவுள்ளன.

திட்டம் பற்றிய அறிவூட்டல் கருத்தரங்குகள், பயிற்சிகள் என்பன பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. திட்டத்திற்குத் தேவையான கோழிகள், கோழிக்கூடு, கோழித்தீவனம் மற்றும் தாங்கிகள் இலவச மாக வழங்கப்படவுள்ளன. (202)

## தென்மராட்சி மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கான கணித விஞ்ஞான பாட வினாடி வினாப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நாளை நடைபெறவிருந்த இப்போட்டிகள் வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் நடத்தப்படுவதையிட்டு நாளைமறுதினம் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (202-207)

# வலி.கிழக்குப் பிரதேச விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஆர்வமில்லை

## கடந்த போகத்தில் ஏற்பட்ட நஷ்டமே காரணம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

வலி.கிழக்குப் பிரதேச விவசாயிகள் இம்முறை வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டவில்லை. கடந்த ஆண்டு நடுப் பகுதியில் இருந்து வெங்காயத்தின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து காணப்படுவதே இதற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த போகத்தில் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். போதிய விளைச்சலும் கிடைத்தது. எனினும் கடந்த ஒகஸ்ட் 11 ஆம் திகதி ஏ-9 பிரதான வீதி மூடப்பட்டதை அடுத்து தென்பகுதிக்கான ஏற்றுமதி தடைப்பட்டது. வெங்காயத்தின் விலையும் பெரும் வீழ்ச்சியடைந்தது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் தற்போதைய போகத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் பின்னடித்து வருகின்றனர். (202-224)

# வடக்கில் 20 கழகங்களை உள்ளடக்கிய லயன்ஸ் கழக மாவட்ட உதவி ஆளுநர்

## ஜூலை முதலாம் திகதி பதவி ஏற்கிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்29

நீர்கொழும்பு கோஸ்ட் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் நிமால் ராஜபக்ஷ நாளை மறுதினம் முதலாம் திகதி சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இலங்கை மாவட்டம் 306 பி இன் உதவி ஆளுநராகப் பதவி ஏற்கிறார்.

அவர் பதவி ஏற்கவுள்ள மாவட்டம் வடமாகாணத்தில் உள்ள 20 லயன்ஸ் கழகங்களை உள்ளடக்கியதாகும்.

இலங்கையில் லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த மாதம் 50 ஆவது ஆண்டு பொன்விழா கொண்டாடப்படவுள்ளதால் வடமாகாண மக்கள் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பல செயற்றிட்டங்களைக் காணும் வாய்ப்புகளைப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

லயன் நிமால் ராஜபக்ஷ 2002ஆம் ஆண்டு ஏ-9 வீதி திறக்கப்பட்டபின்னர் ஐந்துக்கு மேற்பட்ட தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு நலத் திட்டங்களை மேற்கொண்டுள்ளார்.

யுத்தத்தினால் சேதமடைந்து காணப்பட்ட பகுதிகளுக்கு அன்றைய மாவட்ட ஆளுநர் லயன் உபாலி சமரசிங்கவுடன் நேரில் விஜயம் செய்து பல்வேறு சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் வடபகுதி மக்களுக்கு பெருமளவு மருந்து வகைகளையும் மூக்குக் கண்ணாடிகளையும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து லயன்ஸ் கழகங்கள் ஊடாக மக்களைச் சென்றடையச் செய்தார்.

200 நாடுகளை உள்ளடக்கிய 75 ஆயிரம் லயன்ஸ் கழகங்களைக் கொண்ட சர்வதேச கழகங்களின் தலைவராக இலங்கையரான லயன் மகேந்திர அமரசூரிய பொறுப்பேற்க விருக்கின்றார் (ப-207)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளைமறுதினம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (202-207)

## பௌர்ணமி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.பகவான் சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு போயா ஆன்மீக நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் 'பகவானின் தரிசனம்' என்னும் பொருளில் வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி விசேட சொற்பொழிவாற்றுவார். (203)

* * *

கொக்குவில் மேற்கு பாக்யா இசைப்பயிலகத்தில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் நடத்தப்பட்டு வரும் தன்னம்பிக்கை சொற்பொழிவில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் சொற்பொழிவு இடம்பெறும். (203)

* * *

தாவடி கொக்குவிலில் உள்ள இராமகிருஷ்ண சமிதியினர் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சமிதி மண்டபத்தில் பூரணை நிகழ்வை நடத்தவுள்ளனர்.

இதேவேளை, கடந்த 23ஆம் திகதி வழங்கப்பட்ட போசாக்கு உணவுப் பொதிகளைப் பெறத் தவறிய இணுவில், தாவடி, சாவற்கட்டு, சுதுமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த கர்ப்பவதிகள் மற்றும் தாய்மாருக்கு இந்நிகழ்வின் போது போசாக்குப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. (203)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்29

நீர்வேலி தெற்கு அம்பாள் ஆலய வருடாந்த ஆனிப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (203-224)

* * *

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு வனுவில் நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த் திரு விழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை காலை 108 சங்காபிஷேகம் இடம்பெற்றுத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-207)

* * *

நவாலி அட்டகிரி முருகன் ஆலய தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெறும். (203-95)

* * *

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி மாலை 4 மணிக்கு திருமஞ்சத் திருவிழாவுடன் நிறைவு பெறும். (203-224)

* * *

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும்.

நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-72)

* * *

சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10.15 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ சுவாமி ஆலய



## தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் -29.06.2007

## ஆசிச் செய்திகள்

### ஆலய ஆதீன கர்த்தா

பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ சுவாமி கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றும் சிறப்புற அமைந்துள்ள ஓர் ஆலயமாகும். அருணகிரிநாதரால் ''உறவு சிங்கிகள் காமாகாரிகள்'' என அடி எடுத்து ''திருப்புகழ்'' பாடப்பெற்ற தலமுமாகிய கந்தவனத்தில் அமர்ந்திருந்து அருள் பாலிக்கும் கந்தவனக் கல்யாண வேலவ சுவாமி இன்று வெள்ளிக்கிழமை தேரில் அமர்ந்து வீதி உலாவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

**கொடி ஏற்ற வைபவத்துக்குச் சிறப்புண்டு:** கொடிமரம் சிவத்தைக் குறிக்கும் சீலை ஆன்மாவைக் குறிக்கும். தருப்பைக் கயிறு ஆன்மாவைப் பீடிக்கும் பாசத்தைக் குறிக்கும்.

பாசம் சிவத்தைச் சார்வதில்லை ஆன்மாவையே சாரும். இதனைக் கொடிச்சீலையுடன் இணைக்கப்பட்டுள்ள தருப்பைக் கயிறு குறித்து நிற்கிறது. இதனை விளக்குவதே கொடியேற்ற வைபவமாகும்.

**தேர்த்திருவிழாவுக்கு ஒரு சிறப்புண்டு:** தேர் வீதி வலம் வரும் உற்சவத்தின்போது முருகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதி உலா வரும்போது திரிமல சங்காரம் செய்கின்றார். ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றையும் அழித்து முத்திப் பேற்றை அளிப்பதற்காகவே வீதி உலா வருகின்றார் என்பது தத்துவம்.

மானிடர்களாகிய நாமும் கல்யாணக் கந்தன் மகாதேரில் ஆரோகணித்து வீதி உலாவரும்போது அவருக்கு அர்ச்சனை செய்து வழிபட்டு மும்மலங்களையும் அழித்து இறை அருள் பெறுவோமாக.

**செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாப்பிள்ளை,**
*ஆலய ஆதீனகர்த்தா- தலைவர்.*

### ஆலய பிரதம குரு

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய சிறப்புக்களை கொண்டு விளங்கும் வடமராட்சி பொலிகண்டி கந்தவனப் பதி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம் வரலாற்றுப் பெருமைக்குரிய ஓர் உன்னதமான ஆலயமாகும்.

இத் தலமானது இலங்கையில் ஆறுபடை வீடுகளாகப் போற்றப்படும் தலங்களுள் ஒன்றாகும். அது மட்டுமல்லாமல் மூன்று ஷண்முகர்கள் (ஆறுமுக ஸ்வாமிகள்) ஒருங்கே வீற்றிருந்து அருள்பாலிப்பதோடு மூலவராக தேவிமார் சகிதம் ஆறுமுக சுவாமியே வீற்றிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.அத்துடன் வன்னிமாவட்டம் குமாரபுரத்திலிருந்து பூஜிக்கப்பட்டு வந்த திருவுருவமாகிய ஷண்முகப் பெருமான் இந்த ஆலயத்திலேயே இருந்து அருள்பாலித்து கொண்டிருப்பது மிகமிக போற்றுதலுக்குரியதே.

ஆன்மாக்களுக்கு ஆறுதல் தந்து கருணை மழை பொழிந்து தன்னை வழிபடுகின்ற அடியார்களுடைய துயரை நீக்கி அருள் பாலிக்கும் ஆறுமுகப் பெருமானுடைய அழகினையும், கருணையையும் எம்மால் கூறமுடியாது.

பலவகைச் சிறப்புக்களுக்கு இலக்கணமாகத் திகழும் கந்தவனப்பதி முருகப் பெருமானுடைய மஹோற்சவம் ஆனி மாத பூரணையை தீர்த்தமாக கொண்ட 15 நாள்கள் இடம் பெறுவது வழமை. இந்தவகையில் இன்று ரதோற்சவம் காணும் ஷண்முகப் பெருமான் அனைத்து மக்களுடைய துன்பங்களையும் நீக்கி நாட்டில் நல்லதொரு நிலையான சமாதானம் நிலவ திருத்தேரேறி வந்து அருள் புரிவார்.

என்றும் கந்தவன நாதன் திருப்பாதம் பணிவோமாக.

சிவப்பிரம்மஸ்ரீ குமாரகுருமணி **ச.வைத்தியநாதக்குருக்கள்,**
*தேவஸ்தான பிரதம குருவும், மஹோற்சவ குருவும்.*

### துர்க்காதுரந்தரி


பொலிகண்டியில் அமைந்த கந்தவனக் கடவை முருகப் பெருமானின் திருக்கோயிலை மையமாகக் கொண்டு இந்த ஊர் சிறப்புப் பெறுகிறது. இங்கு கோயில் கொண்டு எழுந்தருளிய கல்யாண வேலவ சுவாமி அற்புதம் மிக்கவர்.

ஆண்டாண்டு காலமாக ஆதீனகர்த்தர்களின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்த இக்கோயில் தற்போது ஆலோசனை சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த மண்ணில் பாராட்டப்பட்ட பல அறிஞர்களையும் சேவையாளர்களையும் ஆலோசனைச் சபையாகக் கொண்டு மிளிர்கிறது. இவர்களால் கையேற்கப்பட்ட பின் நடைபெறும் முதலாவது தேர்த் திருவிழா இதுவாகும். முருக பக்தர்கள் ஆடியும், பாடியும், அங்கப் பிரதட்சணம் செய்தும், அடி அளித்தும், காவடி எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் சிறப்பான நாள் தேர் உற்சவ நாளாகும்.

''வேல் உண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை'' என்பதை உள்ளத்திலிருத்தி உருகி நிற்போமாக.

*துர்க்கா துரந்தரி கலாநிதி*
**தங்கம்மா அப்பாக்குட்டி,**
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.*



### அருணகிரி முதற்கொண்டு புலவர்கள் பலரும் புகழ்பாடித் துதித்த கந்தவனம் கல்யாண வேலவன்...

*'கங்கையிடை கிழந்தவிழிப் பொறிகள் சரவணத்திலே வளர்ந்து கார்த்திகைப் பெண்களிடை அறுவராய்த் தவழ்ந்து உமையாள் அணைத்திடவே ஆறுமுகனாய் உதித்த அழகர் குழகா ஆறுமுகா கந்தவனநாதா கல்யாண வேல் முருகனே'* (ஆக்கம் -காலஞ்சென்ற செல்வி.பா.திக்கம் செல்லையா பிள்ளை, கந்தவனக்கோயில் ஆதினகர்த்தா)

இலங்கைத்திரு நாட்டில் உள்ள திருப்படைக் கோவில்கள் ஆறாகும் இவை கதிர்காமம், உகந்தை, நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனம், செல்வச் சந்நிதி என்பனவாம்.

கந்தவனத்தில் அருளாட்சிபுரியும் கல்யாண வேலவ சுவாமி வேதாரணியம் துறைமுகத்திலிருந்து காங்கேசன் துறையை நோக்கி மரக் கலங்கள் மூலம் பிரமா, விஸ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் புடை சூழ காங்கேசன்துறை முகத்தை வந்தடைந்தார்.

அருகில் உள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை அடைந்து அதன் பின்பு அருள் பொலிவு கூடிய பொலிகண்டி இறங்குதுறையை அடைந்தனர். இங்கு வன்னிவனம் என அழைக்கப்பட்ட அன்றைய சமீவனத்தை அருளாட்சி செய்ய கந்தப்பெருமான் வந்தடைந்தார்.

கடல் பிரயாணம் செய்த பிரம்மா, விஸ்ணு , இந்திரன் முதலான தேவர்கள் தங்கள் கடல் தோஷம் நீங்கும் பொருட்டு பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமிக்கு மகா அபிஷேகம் செய்து வழிபட்டு கடல் பிரயாண தோஷம் நீங்கப் பெற்றார்கள். இத்தேவர்களுக்கு எம்பெருமான் அருள் மழை பொழிந்தமையால் அன்றிலிருந்து கந்தவனம் என்ற சிறப்பு பெயர் பெற்றது.

கந்தவனப் பெருமான் முல்லைத்தீவு - குமாரபுரத்தில் வைத்து வழிபடப்பட்டு போத்துக்கேயர் காலத்தில் இக்கோயில் அழிக்கப்பட்டது. ஆறுமுகனார் கடல் மார்க்கமாக பொலிகண்டி கந்தவனத்திற்கு எடுத்துவரப்பட்டு பொலிகண்டி கந்தவனக் கல்யாண வேலவ சுவாமி என வழிபடப்பட்டு வரப்படுகிறது.

இக்கல்யாண வேலவக்வாமியை வழிபட்டு வரும் காலத்தில் அழகிய ஆறுமுகனாரின் திருச்சிலையில் ஊறு அடைந்தமையால் உள்வீதியில் வடக்குப் புறத்தில் அமைக்கப்பட்ட மணி மண்டபத்தில் வைத்து 'பழையவர்' என அழைக்கப்படுகிறார். இவருக்கு இன்றும் பூசைகள் செய்து வழிபட்டு வருகிறோம்.

**புலவர்களால் பாடப்பெற்ற சிறப்புடையது**

கண்பார்வை இழந்த உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவசம்புப் புலவர் எம்பெருமானுக்கு விரதம் இருந்து 'நான்மணி மாலை'ப் பதிகம் பாடி இக் கோயிலில் உள்ள தீர்த்த கேணியில் தீர்த்தமாடி தான் இழந்த கண்ணை மீண்டும் பெற்றார் என்பது வரலாறு. இவ்வாலயத்திற்கு அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிச் செய்த பெருமையும் உண்டு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனப்படும் மூன்று விசேடங்களும் ஒருங்கமையப் பெற்றதாய கந்தவனம் என்னும் திருப்பதியில் எழுந்தருளி இருக்கும் கல்யாண வேலவ சுவாமி மீது நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சொல்நயம், பொருள்நயம் பொலிய திருப்பணி எழுச்சியும் நான்மணி மாலையும் சேர்ந்த திவ்விய பிரபந்தம் பாடப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நான்மணி மாலை அரங்கேற்றப்பட்டபோது எல்லோராலும் வணங்கி போற்றப்பட்ட யோகர்சுவாமி அவர்கள் பிரசன்னமாக இருந்ததாகவும் இப்பாடல் பாடப்பெற்றபோது மயில் ஒன்று வந்து தன்தோகையை விரித்து ஆனந்தமாக ஆடியது என்பது பெருமைமிக்க வரலாறாகும்.

மேலும் தமிழ்நாடு திருவண்ணாமலை கலைக்கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் கா.கோ.வெங்கடராமன் அவர்கள் 'கந்தவனக் கலம்பகம்' பாடிப் பெருமை பெற்ற தலமாகும். மன்னுயிர்கள் தம்மை தன்னிடம் இழுக்கும் நிகரில்லா அழகும் நன்னிய இளமையும் அருட்பார்வையும் இனிமையும் அமையப்பெற்ற பொலிகண்டி கந்தவனக் கல்யாண சுவாமியின் நறுமணப் பாதங்களை நாவால், சிந்தையால் தலையால் அடி பணிந்து அருள் வேண்டும் அடியவர்களுக்கு துன்பங்களை நீக்குபவன் எம்பெருமான். அவன் நல்லருள் பெற வணங்கி இன்று நாம் அனுபவிக்கும் இன்னல்கள் நீங்க அருள் வேண்டி அவன் திரு வடிகளை வணங்குவோமாக.

பழமை வாய்ந்த வன்னிமரத்தை தலவிருட்சமாக கொண்டவரும் கந்தரதண்யம், கந்தவனக்கடவை, கந்தசுவாமி கானகம், கல்யாண வேலவ சுவாமி ஆகிய சிறப்பு நாமங்களைக் கொண்ட ஆறுமுகப்பெருமான் ஆலயத்தை திறம்பட யாபேரும் போற்றக் கூடியதாக நடாத்தி வந்த காலஞ்சென்ற செல்வி பாற்பதியம்மை திக்கம் செல்லையாபிள்ளை மேற்படி கோவில் ஆதினகர்த்தாவாக இருந்தார். இவர் கந்தனடி சென்ற பின்பு அன்னாரின் அன்புத் தங்கையார் செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை இன்றைய ஆதின கர்த்தாவாகப் பொறுப்பேற்றதும் இக்கோயிலில் முன்னேற்றம் வளர்ச்சி என்பன கருதி அனுபவம், ஆற்றல், சிறந்த பண்பு, கல்யாணவேலவன் மீது பக்தி என்பன கொண்ட ஓர் ஆலோசனைச் சபையினை பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாண சுவாமி தேவஸ்தான பிரதமகுரு சிவப்பிரம்மஸ்ரீ குமரகுருமணி ச.வைத்தியநாதக்குருக்களின் ஆசி பெற்று நியமித்துள்ளார். இவர்களது இறை தொண்டினால் இக்கோயில் சிறப்புறும். அவன் திருத்தாள் பணிவோகமாக!

*சித்த வைத்திய கலாநிதி* **இ.கனகலிங்கம்,**
*செயலாளர், பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ சுவாமி கோயில் ஆலோசனை சபை.*

### தமிழர்களின் இன்னல் நீங்குவதாக!

ஆன்மீக ஆரோக்கியம் என்பது அனைவருக்கும் வேண்டப்படுகின்றது. உடல், உள, சமூக ஆரோக்கியத்தை மேம்படுத்தவல்லதும் அதுவே. சமய அனுஷ்டானங்கள், விரதங்கள், நோன்புகள் உடலை யும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்துவன. சமூக வாழ்வைச் சீர்ப்படுத்துவன. குற்றம் களைந்து குணங்களை ஓங்கச்செய்வன.

இவ்வகையில், இன்று பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒவ்வொருவரும் கந்தவனக் கடவைக் கந்தனை ஒரு கணமாயினும் சிந்தையில் இருத்துவர். வாழ்விடமாகக் கொண்டவர்களோ அவன் அற்புத அழகில் தம்மை மறப்பர். அவனருள் எல்லோருக்கும் கிட்டுவதாக.

கலி தீர்க்கும் கந்தக் கடவுள் அடியாரின் நோய்தீர்த்து சந்ததி விருத்தியை உண்டுபண்ணுவதோடு, இன்று இலங்கைத் தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் யாவற்றில் இருந்தும் விடுவித்து சாந்தியும் சமாதானமும் கிடைக்கச் செய்து நல்லதொரு சமூக ஒழுங்கமைவுக்கு வித்திடவேண்டும் என்பதே ஒருமித்த எண்ணமாகும்.

ஒவ்வொருவரும் ஆணவ மலம் அகற்றி ஆண்டவனின் குழந்தைகளாக தூய உள்ளத்தினராய் உண்மையான இந்துவாக வாழ ஆண்டவனைப் பிரார்த்திப்பதோடு, என் இனிய நல்லாசிகளும் உரித்தாகுக.

**க.கணேஸ்,**
*அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம். போஷகர், ஆலய ஆலோசனைச் சபை.*

### வேலவன் அருளும் கருணையும் கிடைக்கட்டும்!

சீரும் சிறப்பும் பொலிந்து விளங்கும் பொலிகைப் பகுதியிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் ஒருங்கே கொண்டு அமையப்பெற்றது கல்யாணவேலவ சுவாமி கோவில்.

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப் பெற்றதும் யோகர் சுவாமியால் வழிபாடு செய்யப்பெற்றதும் என பழமையும் பெருமையும் வாய்ந்த இந்த ஆலயத்தில் வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்து மக்களைக் காத்தருளிவரும் கல்யாண வேலவ சுவாமி வள்ளி தெய்வானையுடன் இரத்தில் ஆரோகணிக்கின்ற காட்சி மிக அற்புதமானதாகும்.

வேலவனின் அருளும் கருணையும் மக்களுக்கு குறைவின்றிக் கிடைக்கப் பிரார்த்திப்பதுடன் இன்று நடைபெறும் இரத உற்சவம் குறைவேதுமின்றி சிறப்பாக நடைபெறப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.வரதீஸ்வரன்**, *பிரதேச செயலாளர், பருத்தித்துறை.*

### கந்தனுக்கு·தொண்டாற்றி இன்புறுவோம்

எங்கும் அறம் மெலிந்து மறம் ஓங்கி உலகை ஆட்டுகின்றது. எங்கும் கொலை எங்கும் அநீதி எங்கும் அடக்குமுறை என அதர்மம் தலை விரித்து ஆடுகின்றது.

தொல்லையிலும் பிறவிச் சூழும் தளைநீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்குவது முருக நாமமே ஆகும்.

அல்லற்படும் மக்களில் வாயில் கந்தவேளின் நாமம் பல முறை ஒலித்தால் துயரமெல்லாம் ஆதவனைக் கண்ட பனி போல நீங்கிவிடும்.

முற்காலத்தில் கற்பூரம் விளைந்தும் வன்னிமரச் சிறப்புப் பொருந்தியும் விளங்குகின்ற கந்தவனக் கடவையில் வீற்றிருக்கும் கலியாண வேலனைத் தினமும் பாடியும் அவருக்கச் சரியைத் தொண்டு ஆற்றியும் வழிபட்டால் அவர் அருள் பெற்று இன்புறுவர்.

**ம.ஆறுமுகம்,**
*இளைப்பாறிய அதிபர்.*

### எங்கள் தெய்வம் தேரேறி வருகிறார்!

கந்தவனக் கடவையில் வீற்றிருக்கும் கல்யாணவேலர் இன்று தேரேறி வருகிறார். எம் துன்ப துயரங்களைக் களைந்து அருள்மாரி பொழியும் ஆறுமுக நயினார் தேரேறி வருகிறார்.

நவாலி சோமசுந்தரப் புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் ஆகியோருக்குக் கண்பார்வை தந்த கந்தவன வேலவன் தேரறி வருகின்றார்.

கண்ணீரோடும் கவலையோடும் வாழும் எம்மக்களுக்குக் கருணை வரம் தரக் கந்தவனக் கந்தன் தேரேறி வருகின்றார். நான்மணி மாலை கண்ட கந்தவனக் கடவைக் கல்யாண வேலவர் எம் இன்னல் எல்லாம் தீர்த்து எமக்கு நல்வாழ்வு தர இன்று தேரேறி வருகிறார்.

ஆறுமுகப் பெருமானுடைய திருப்பாதங்களை வணங்கி எம் எல்லோருக்கும் இனியவாழ்வு வழங்கிட அவன் திருப்பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

**சி.சிவபாலசிங்கம்.** *கிராம அலுவலர்.*

### ஆலய ஆலோசனைச் சபை

***போசகர்:***- க.கணேஷ், அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.
***தலைவர்:***- செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை, கோயில் ஆதீனகர்த்தா.
***உப தலைவர்:***- சி.சிவராஜா, இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர்.
***செயலாளர்:***- கலாநிதி இ.கனகலிங்கம் J.P., இளைப்பாறிய சித்த வைத்திய கலாநிதி.
***உப செயலாளர்:***- கலாநிதி இ.கனகரத்தினம்.
***பொருளாளர்:***- ம.ஆறுமுகம் J.P., இளைப்பாறிய அதிபர்.
***கணக்குப் பரிசோதகர்:***- ந.தெய்வேந்திரராஜா, அதிபர், ஹாட்லிக் கல்லூரி.

***காரியக் குழுவினர்:***-
1. சிவப்பிரம்மஸ்ரீ குமரகுருமணி ச.வைத்தியநாதக் குருக்கள், தேவஸ்தான பிரதம குரு.
2. க.குணரத்தினம் - இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்.
3. ம.யோகதாசன்- பிரபல வர்த்தகர், நெல்லியடி.
4. க.கந்தசாமி - இளைப்பாறிய தபாலதிபர்.
5. மு.சின்னத்துரை J.P.

அம்மன் ஸ்ரோர்ஸ்
முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.
உரிமையாளர்- S.சிறிகரன்

கலைமகள் வர்த்தக நிலையம்
பிரதான வீதி, நெல்லியடி.
உரிமையாளர்- இ.தங்கவேலாயுதம்

வான் அன் கார் சேவை
தம்பலடி, பொலிகண்டி. T.P.: 077-3039658
உரிமையாளர்- உ.கிரிதரன் 0777-111662

செல்லமுத்து புடைவை மாளிகை
பிரதான வீதி,
நெல்லியடி.

நெல்லை சில்க்
பிரதான வீதி, நெல்லியடி.
உரிமையாளர்:-S.அகிலன்

கலைவாணி கண்ணாடி களஞ்சியம்
கலைவாணி புடைவையகம்
பிரதான வீதி, நெல்லியடி.

கலைமகள் ஒவ்செற் பதிப்பகம்
கிராமக்கோட்டுச் சந்தி,
பருத்தித்துறை.

கணேசன் ஹாட்வெயர்
பிரதான வீதி,
நெல்லியடி.

ஹப்பி ரெலிக்கொமினிக்கேஷன்
ஹப்பி ரெக்ஸ் ரைல்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி.

தேவா புகைப்படக் கலையகம்
ம.ம.வி.வீதி, நெல்லியடி. T.P.: 0777- 044358
Email- Theva li@yahoo.com

சாயி போட்டோ அன் வீடியோ
ம.ம.வி. வீதி, நெல்லியடி.
T.P.: 077- 6055094

அம்பிகை
ரெயிலறிங்
வதிரிச்சந்தி.

செல்லா டிஜிற்றல் வீடியோ
அன் போட்டோ
நவிண்டில், கரவெட்டி.

அம்பிகை ஓடியோ அன் வீடியோ சென்ரர்
ஆலங்கட்டை வீதி, கொற்றாவத்தை.
T.P.: 077- 6744000

ஜெயா மணிப்பந்தல் சேவை
பத்திரகாளிகோயிலடி, பொலிகண்டி.
உரிமையாளர்:- ந.தவராசா,
T.P.: 077- 9344478

தரன் சவுண்ஸ் சேவிஸ்
தடுவன், பொலிகண்டி.
உரிமையாளர்:- ஹரிகரன்

விஜய் வீடியோ விஷன்
ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி.
உரிமையாளர்:-T.பரமானந்தம்

கோபிகா போட்டோ அன் வீடியோ
பொட்டனசுட்டி, பொலிகண்டி.
கொக்கட்டியாவளவு, வல்வெட்டி.

அருண் அழகுமாடம்
பிரதான வீதி,
நெல்லியடி.

மதுரன் கிறா(f)பிக்ஸ் &
ஓவ்செற் பிறின்ரேர்ஸ்

HERO SUPER COMPLEX
Main Street, Nelliady,
Karaveddy.

வேல்முருகன் ஸ்ரோர்ஸ்
V.M.S.,
திக்கம்.

வே.க.இராசகோபால்
இரத்தினா ஸ்ரோர்ஸ்
திக்கம் சந்தை, அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

கலையரசி
வீடியோ சென்ரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சரசாலை வடக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட **தம்பிஐயா சபாநாயகம் (J.P)** அவர்களின் புதல்வன்

செல்வன்
**சபாநாயகம் திலகன்**

29-06-2007ஆம் திகதியாகிய இன்று B.M.I.C.H. கொழும்பில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.Sc. (Computer Spl.) பட்டம் பெறுவதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் உயர் கல்வியில் சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அக்கா கோதை,
அண்ணாமார்கள்
இளங்கோ, திருநந்தி, அகிலன்
மற்றும் அத்தான், அண்ணிமார்கள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி-52773)

---

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chilaw.
(Reg.No. 6382)AR/PR/No-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:** எங்களின் பொன்னாங்காணி தைலத்தின் பெட்டியில் எழுத்து மிகவும் தெளிவாகத் தெரியும். போலியான பொன்னாங்காணி தைலத்தின் எழுத்து தெளிவற்றதாக இருக்கும். அத்துடன் போலிப் பெட்டிகளின் அடிப் புறத்தில் உற்பத்தித் திகதியும் முடிவு திகதியும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து போலித் தயாரிப்புக்களை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

(சி-52710)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 01 |
| 01 | 07 |
| 1948 | 2004 |

அமரர் **சோமலிங்கம் கணேசலிங்கம்**
(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர்,
யாழ்., கிளிநொச்சி கட்டட நிர்மாணத் திணைக்களம்)

திதி- சதுர்த்தசி

ஆண்டுகள் மூன்றென்ன?
அறுபது ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயர்.

காளி கோயிலடி,
குப்பிளான் வடக்கு,
ஏழாலை.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(62276)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 | 21 |
| 02 | 06 |
| 1929 | 2005 |

அமரர் **வி.பொன்னுத்துரை**
(B.A.,SLPS - I, ஓய்வுபெற்ற அதிபர்)

திதி 29-06-2007

ஆண்டுகள் இரண்டு போனாலும்
காணும் இடமெல்லாம் நீங்கள்
உடலால் பிரிந்தாலும் எம்
உள்ளத்தில் நிலைத்து வாழ்கிறீர்கள்.

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

10,வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(62266)

---

### கூட்டுறவுப் பணியாளர்களுக்குச் சம்பளக் கொடுப்பனவு

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை பணியாளர்களுக்கான அதிகரித்த புதிய சம்பளக் கொடுப்பனவு இந்த மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட்டுள்ளதென சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய சம்பள அதிகரிப்புக்கான நிலுவையும் இம்மாத சம்பளத்துடன் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டன.(202-224)

---

### விற்பனைக்கு

புதிய பிளாஸ்ரிக் கதிரைகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: S. சிவதேவன், நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி,சாவகச்சேரி. T.P.: 077 5792203.

(62304)

---

### அறைகள் வாடகைக்கு

பல்கலைக்கழக மாணவிகட்கு அறைகள் வாடகைக்கு உணவுடன் உடன் விடப்படும்.

தொடர்புகட்கு: 73/1, கலட்டி அம்மன் வீதி,
பிறவுண் றோட் அருகாமை.
T.P.: 077- 9906362.

(62301)

---

**இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு**
**பிருந்தாவன் கல்லூரி**

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

(சி-52523)

அடிப்படைத் தகைமை க.பொ.த (உயர்தரம்) 2 பாடங்களில் சித்தி

பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**

285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அருட்செல்வவிநாயகம் நிலகவதி
துன்னாலை கிழக்கு முன்னாள்
வெல்லிங்கத்தோட்டப் பிள்ளையார்
ஆலய நிரந்தர தர்மகர்த்தா (மனேச்சர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.09.1921 | 03.07.2001 |

அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளி விளக்கே!
ஆண்டுகள் ஆறு கடந்தாலும் மாறிடுமா
உங்கள் பாசத்தின் நினைவுகள்
ஆறுதல் இல்லையம்மா எமக்குப் பாரினில்
வானுறையும் தெய்வமாய் நின்று வழி
நடத்துவாயம்மா
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.

'தம்பலத்தனை'
துன்னாலை வடக்கு.

பா.பாஞ்சாலி
(அன்பு மகள்)

(62251)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பல்கலைக்கழகத்தில் Computer Science (Special) பயின்று இன்று (29.06.2007) பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.Sc. பட்டம் பெறும் எமது அன்புத் தங்கை

செல்வி **துஷா சிவபாலசுந்தரம்**

அவர்கள் கல்வியில் மேன்மேலும் வளர்ந்து சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

சுசன் அத்தான், தீபா அக்கா,
தேனு ஒர்சன்
மோகன் அத்தான், குட்டி அக்கா,
நர்மிதா, நந்திதா (ஜேர்மனி)

புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.

(62294)

---

### பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி **சோதிமலர் தியாகலிங்கம்**

எங்கள் பாடசாலையில் பகுதித் தலைவியாகச் சிறப்புறக் கடமையாற்றிய, பாடசாலைச் சமூகத்தின் 'உயர்விருதை'யும் பெற்ற எங்கள் ஆசிரியை திருமதி சோதிமலர் தியாகலிங்கம் அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். அவரை மனதாரப் பாராட்டுவதுடன் அவரின் எதிர்காலம் சிறப்புறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
அபிவிருத்திச்சங்கம்,
பருத்தித்துறை.

(சி.52776)

---

## யா/ இணுவில் மத்திய கல்லூரி

### ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2007

நாளை(30.06.2007) சனிக்கிழமை காலை 9.00 மணி

தலைவர்: திரு.அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்)
முதன்மை விருந்தினர்: உயர்திரு. இ.விக்னேஸ்வரன் (கணிதத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: திரு. செ.குபேரநாதன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)
கௌரவ விருந்தினர்: டாக்டர் மு.பஞ்சலிங்கம்
பரிசில் வழங்கல்: முதன்மை விருந்தினர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்.

(62285)

---

## நீங்காத நினைவலைகள்

### முதலாம் ஆண்டு



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 12 | 09 |
| 12 | 07 |
| 1924 | 2006 |

திருமதி பொன்னம்பலம் முத்தம்மா
திதி: அபரபக்க திரயோதசி
(29.06.2007)

அன்போடும் பண்போடும் எமை வளர்த்து
சீரோடும் சிறப்போடும் வாழவைத்த- எம்
அன்னையே
எமைவிட்டு விண்ணுலகடைந்து ஆண்டொன்று
ஆனதுவோ
ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது.

### ஐந்தாம் ஆண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 15 |
| 10 | 07 |
| 1957 | 2002 |

நாகலிங்கம் கந்தசாமி
திதி: பூர்வபக்க பஞ்சமி
(20.06.2007)

அன்பின் உறைவிடமே பண்பின்
இலக்கணமே
இன்பமாய் எமை வாழவைத்த எம்
அன்புத் தெய்வமே
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ
எத்தனை ஜென்மங்கள் போனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மாறாது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

56, முள்ளிவீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

(62270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஊடக அடக்குமுறைச் சட்டத்தை மீளக் கொண்டுவரும் கபடத்தனம்

இலங்கைத் தீவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் வந்த காலம் தொட்டு, இங்கு அடிப்படை மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவது குறித்து தேசிய, சர்வதேச மட்டங்களில் தொடர்ந்து குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

நாட்டின் உயர் சட்ட வேதமான அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளை நாசூக்காக மீறும் ஏற்பாடுகள் ஏற்கனவே அவசரகாலச் சட்டத்தின் கீழ்அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு ஒழுங்கு விதிகள் மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பது குறித்து பல தடவைகள் இப்பத்தியில் சுட்டிக்காட்டப் பட்டாயிற்று.

போதாக்குறைக்கு மோசமான வன்முறைகள் மற்றும் அடிப்படை மனித உரிமை மீறல்களில் ஈடுபடக்கூடிய படையினருக்கு விசேட பாதுகாப்பு கவசத்தைத் தரும் விதத்தில் சிறப்பு சட்ட விலக்களிப்பு ஏற்பாடுகள் வழங்கப் பட்டிருக்கின்றமையும் கடும் கண்டனத்துக்கு உள்ளாகி யிருக்கின்றது.

ஒரு புறம் அரசமைப்பின் கீழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று கூறிக்கொண்டு, மறுபுறம் பொதுமக்கள் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் என்ற அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் அந்த அடிப்படை உரிமைகளை அடியோடு பறித்து வருகின்றது அரசு.

அதே இரட்டைப் போக்கு எத்தனத்தை மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்திலும், ஊடக சுதந்திரத் திலும் மேலும் அதிகமாகப் பயன்படுத்த மஹிந்தர் அரசு முயல்கின்றது.

ஒருபுறம் ஊடக சுதந்திரம் முழு அளவில் நாட்டில் பேணப்படுவதாக அது பீற்றிக்கொள்கிறது. இந்த நாட்டில் ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் தணிக்கை முறையை நடைமுறைப்படுத்தாத ஒரே ஜனாதிபதி தாமே என்று ஜனாதிபதி மஹிந்தரும் தம்மைத் தாமே போற்றிக் கொள்ளத் தவறுவதில்லை. ஆனால் அதேசமயம் வேறு விதங்களில் - நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற 'பந்தாவின்' பெயரிலான அழுத்தத்தினாலும், அச்சுறுத்தலின் மூலமும் மற்றும் இன்னோரன்ன பிற நெருக்குவாரங்கள் வாயிலாகவும் மறுபுறம் ஊடக சுதந்திரத்தை மோசமாகப் பாதிக்கும் அராஜகமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு - ஊடக உரிமைக்கு - நிரந்தர ஆப்பு வைக்கும் மற்றொரு முயற்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே சத்தம் சந்தடியின்றி முன்னெடுக்க முயல்கிறார் என்ற செய்தி இப்போது கசியத் தொடங்கியிருக்கின்றது.

ஊடக மற்றும் தகவல் துறையில் இடம்பெறும் மான நஷ்டத் தவறுகளை சிவில் குற்றங்களுக்கு அப்பால், கிரிமினல் (குற்றவியல்) குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுக்க வழி செய்யும் பழைய சட்ட விதிகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எத்தனிக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்தச் சட்டத்தை மீள நடைமுறைக்குக் கொண்டுவர வழி செய்யும் விதத்திலான அவசர அமைச்சரவைப் பத்திரம், ஜனாதிபதி மஹிந்தரின் வழிகாட்டலின் கீழ் நேற்றுமுன்தினம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப் பட்டதாகவும், ஆனால் அது குறித்து அமைச்சரவைக்குள் எழுந்த கருத்து முரண்பாடு காரணமாக, அம் முயற்சி அத்துடன் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

ஊடகங்களில் வெளியாகும் செய்திகளுக்காக ஊடகப் பொறுப்பாளர்களை கிரிமினல் (குற்றவியல்) குற்றங்களுக்குப் பொறுப்பாக்கும் இந்த நடைமுறை இலங்கையில் ஏற்கனவே அமுலில் இருந்த விவகாரம். இந்தச் சட்டத்தினால் ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் சுதந்திரம் பறிக்கப்பட்டதுடன் பெரும் அவலத்தையும் அத்தரப்புகள் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இந்தச் சட்டத்துக்கு எதிராக தேசிய, சர்வதேச அளவில் எழுந்த எதிர்ப்பலைகளை அடுத்து 2002இல் ஆட்சிக்கு வந்த ரணில் அரசு, அவ்வாறு ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் கிரிமினல் குற்றப் பொறுப்பாக்கும் குற்றவியல் அவதூறுச் சட்டத்தை ரத்துச் செய்தது. தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி அவதூறு ஏற்படுத்துவதற்கு எதிராக சிவில் வழக்கே தொடரமுடியும். அத்தவறு சிவில் குற்றமாகக் கருதப்பட்டு அதன் அடிப்படையிலேயே நடவடிக்கையும் எடுக்கப்பட முடியும்.

கருத்து வெளியிடும் சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டம் எனக் கருதப்பட்டு, அதனடிப்படையில் ஒழிக்கப்பட்ட - ரத்துச் செய்யப்பட்ட - சட்டத்தையே, நாட்டுக்கு அவசரமான சட்டமூலம் என்ற பெயரில் மீள நடைமுறைக்குக் கொண்டுவரத் துடிக்கின்றது மஹிந்தர் ஆட்சி.

ஊடக சுதந்திரத்தையும், கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் பறித்து, கபளீகரம் செய்து, ஊடகங்களை அடக்கி, அவற்றுக்கு வாய்ப்பூட்டுப் போட எத்தனிக்கும் ஓர் அடக்குமுறைத் திட்டமே இந்தச் சட்டத்தை மீளக் கொண்டுவர எடுக்கும் முயற்சி.

'மஹிந்த சிந்தனை'க்குள் இவ்வாறு அரூபமாகப் புதைந்து கிடக்கும் நச்சுத் திட்டங்கள் குறித்து இலங்கைத் தீவு மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இல்லையேல் ஊடக சுதந்திரத்தைப் பறித்து, தன் பாட்டில் காட்டுத் தர்பார் நடத்தும் சர்வாதிகார ஆட்சி இலகுவாக நிலைநிறுத்தப்பட்டு விடும். அதனால் பேராபத்து இலங்கைத் தீவு முழுவதற்கும் தான்!

# சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்

## நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன் 29

குடாநாட்டில் தற்போது தொலைபேசி வசதிகள் இல்லாத பிரதேசங்களுக்கு தேவை கருதிய முன்னுரிமை அடிப்படையில் "சி.டி.எம்.ஏ." தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன் "மோட்டோ றோலா" பாவனையாளர்களுக்கும் இந்த இணைப்பை விரைவில் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், 'ரெலிக்கொம்' நிறுவனத்தின் வட மாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன், பிராந்திய முகாமையாளர் என்.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் - தற்போது தொலைபேசி வசதிகள் இல்லாத பிரதேசங்களில் உள்ள அரச திணைக்களங்கள், வங்கிகள், ஏனைய அரச நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் "சி.டி.எம்.ஏ" இணைப்புக்கள் வழங்கப் படவுள்ளன.

✱ இந்த இணைப்பைப் பெறுவதற்கு முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

✱ புதிதாக விண்ணப்பிப்பவர்கள் அதற்கான விண்ணப்பங்களை 'ரெலிகொம்'இன் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

✱ தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் தாம் தற்பொழுது வதியும் பிரிவுக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டையின் இரண்டு நிழற் பிரதிகள் ஆகியவற்றை இணைத்து பிராந்தியக் காரியாலயத்தில் நேரடியாக ஒப்படைக்க வேண்டும். வியாபாரத் தேவைக்கெனில் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியும் இணைக்கப்பட வேண்டும்.

இதேவேளை -

'மோட்டோ றோலா' பாவனையாளர்களுக்கு இந்த இணைப்பை கூடிய விரைவில் வழங்குவதற்கும் முடிவு செய்யப்பட்டது. (அ-50)

## ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை

# வடக்கு, கிழக்கில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது

கொழும்பு, ஜூன் 29

ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்துவதற்கான ஒழுங்குகளை, ஏற்பாடுகள் குறித்து நேற்றுப் பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெற்ற அதிகாரிகள் கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டது.

ஏனைய மாகாணங்களைப் போலன்றி, இவ்விரு மாகாணங்களிலும் பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டே அங்கு பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டிய தேவை உள்ளது என்ற கருத்து நேற்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், இப்பகுதிகளுக்கு வினாப் பத்திரங்கள் எடுத்துச் செல்வது மற்றும் பரீட்சையை பதற்றமற்ற சூழ்நிலையில் நடத்துவது என்பன குறித்துப் பாதுகாப்புத் தரப்பின் ஆலோசனைகளையும், ஒத்துழைப்பைப் பெறுவது குறித்து கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை - உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்களை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு எடுத்து வருவது தொடர்பான கூட்டம் ஒன்று பலாலிப் படைத்தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது. (அ-1)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர்களை மடக்கிப் பிடிக்கும் திடீர் பரிசோதனைகள் தீவிரம்!

## நேற்று மட்டும் 9 பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 29

சட்ட விரோத மின்சாரம் பெறுவோரை மடக்கிப் பிடிப்பதில் மின்சார சபையினரும் பொலிஸாரும் இப்போது இணைந்து திடீர் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் பெறுபேறாக வடமராட்சியிலும் வலிகாமம் தெற்கிலும் பலர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நீதிமன்றங்களில் முன் நிறுத்தப்படுகின்றனர்.

இந்தத் திடீர்ச் சோதனைகளின் போது நேற்று மட்டும் ஒன்பது பேர் சிக்கினர். அவர்கள் நீதிமன்றங்களில் முன்நிறுத்தப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர்.

### வலி.தெற்கில் அறுவருக்கு அபராதம்

யாழ்.மின்சார சபையினரும் சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து வலி.தெற்கில் நேற்று மேற்கொண்ட திடீர் சோதனையின்போது சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஆறு பேர் சிக்கினர்.

மயிலங்காடு, ஊரெழு, ஏழாலை, சுன்னாகம் தெற்கு, உடுவில் ஆகிய பிரதேசங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது சிக்கிய 6 பேரும் மல்லாகம் நீதிமன்றின் முன் ஆஜர் படுத் தப்பட்டனர். நீதிமன்று அவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது.

### வடமராட்சியில் மூவருக்கு அபராதம்

வடமராட்சியில் கம்பர்மலை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் சட்ட விரோதமாக மின் விநியோகம் பெற்ற மூவர் நேற்றுப் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரும் மின்சார சபை அதிகாரிகளும் நேற்று மேற்கொண்ட திடீர் சோதனைகளின் போது சிக்கிய இவர்கள் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன் ஆஜர் செய்யப்பட்டார். இவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதிவான் அவர்களை எச்சரித்து விடுவித்தார்.

இதேவேளை - கரணவாய் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெற்றதாகக் கைது செய்யப்பட்ட மூவரை விளக்க மறியலில் வைக்கும் படியும் நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-202)

# யாழ்.நகரில் நேற்று பிற்பகல் அங்காடி வியாபாரி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜூன் 29

யாழ்.நகரப் பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் அங்காடி வியாபாரம் செய்யும் நபர் இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வேலணையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சிவாகாந்தன் (வயது 29) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் எனக் கூறப்பட்டது.

நகரப் பகுதியில் அங்காடி வியாபாரத்தில் இவர் ஈடுபட்டிருந்தவேளை, அங்கு வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றனர்.

சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்கொலை தொடர்பாக யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா இன்று மரண விசாரணைகளை நடத்தவுள்ளார். (அ-1)

## மாவிலாறு ரூ. 88 லட்சம் நிதிமோசடி வழக்கு

# உயர் அதிகாரிகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர்

## நீதிமன்றில் சட்டத்தரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 29

மாவிலாறு நிதிமோசடி வழக்கில் சந்தேகத்தில் கைதாகி விசாரணைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் மேல் அதிகாரிகள் மீதும் புலன் விசாரணை திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்ய அவர்கள் தவறியுள்ளார்கள்.

கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் சந்தேக நபர்களுக்காக ஆஜராகியுள்ள சட்டத்தரணி.

மாவிலாறு மதகுக் கதவுகள் கடந்த வருடம் விடுதலைப் புலிகளால் மூடப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்ட 2,918 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட நிதியில் 88 லட்சம் ரூபாய்க்கு மேல் மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 5 சந்தேக நபர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் காப்புறுதி அலுவலகர் இராசையா சாரதா, திருகோணமலை பிரதிப் பணிப்பாளர் சரவணமுத்து அரவிந்தன், ஓய்வூதியப் பணிப்பாளர் யு. ஆர்.சந்திரதாஸ, நிதிப் பிரிவு பணிப்பாளர் ஆர்.புண்யசிறி பெரேரா மற்றும் காப்புறுதி சபை தலைவர் நமால் ரட்ணாயக்க ஆகியவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டனர். [illegible] நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பலரிடம் இருந்து வாக்கு மூலங்கள் பதியப்பெற்றுள்ளன. ஆனால் காவலிலுள்ள ஐந்து நபர்களைத் தவிர வேறு எவருக்கு எதிராகவும் சாட்சியங்கள் கிடைக்கவில்லையென்று புலன் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

நிவாரண நிதிகளைப் பெற்றுக் கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுடன் தொடர்புகொள்ள முடியாமல் இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தக் கட்டத்தில் தலையிட்ட பிரதம நீதிமன்ற நீதிவான் குசல சரோஜினி வீரவர்தன புலன் விசாரணை அதிகாரிகள் நியாயமான முறையில் புலன் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க மறுத்த நீதிவான் அவர்களை ஜூலை 11ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ-ப)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 16 | சனிக்கிழமை 30.06.2007 |
| திதி : பூரணை | முன்னிரவு 08.02 |
| நட்சத்திரம் : | சித்தம் பி.ப. 06.19 |
| [illegible] | [illegible] |
| ராகுகாலம் | : 08.56 - 10.26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாயிரத்துக்கும் மேற் பட்ட பக்தர்கள் ஆலயத்தை வந்தடைந்தனர்.

ஆலயத்திற்குவந்துசேர்ந்த பக்தர்களுக்கு தேவையான குடி தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளைவேலணைப்பிரதேசசெயலகம்மேற்கொண்டது.

அமுதசுரபி அன்னதான மடத்தில் பக்தர்கள் தங்கவசதி செய்யப்பட்டுள்ளது. (அ-1)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாடான கருத்துக்களின் உண்மை நிலையை மகா நாயக்கர்கள் எடுத்துக் கூற வேண்டும்.

பயங்கரவாதத்தைஒழித்துக்கட்டுவதில் முப்படையினரும் அர்ப்பணிப்புடன் செயற் படுகின்றனர். கிழக்கில்மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முடியும் தறுவாயில் உள் ளன.

வடக்கு, கிழக்கில் உள்ள எந்த ஒரு நபரி னதும் மனித உரிமை மீறப்படுவதற்கு இட மளிக்கப் போவதில்லை. இராணுவத்தினரின் வெற்றி களையும் நாட்டையும் காட்டிக் கொடுக்க இடமளிக்க மாட்டேன்.

எனவே நாட்டைப் பாதுகாக்கும் பொறுப் பில் என்னுடன்இணைந்துசெயற்பட வேண் டும் என மகா சங்கத்தினரைக் கேட்டுக்கொள் கிறேன் - என்றார்.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வும் முப்படைத் தளபதிகளும் உரையாற்றினார். (அ-1)

## இணைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக அரசு மேற்கொள்வதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், போலி யான யுத்தம், வாழ்க்கை செலவீன அதி கரிப்பு போன்றவை பற்றி மிகவும் விரி வாக ஆராயப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு, அரசை வீழ்த்துவதன் ஊடாகவே பெறப்பட முடியும் என்று இரு தரப்புகளும் இச்சந்திப்பில் இணக்கம் கண்டிருக்கின்றன.

அது, தொடர்பாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரி விக்கப்படுகின்றது. இந்தச்சந்திப்பில் மங்களசமரவீர, தனது கட்சியின் கொள்கை அறிக்கையையும் ரணிலிடம் சமர்ப்பித்தார்.

இக்கொள்கையின் அடிப்படையில் இரு கட்சிகளும் இணைந்து செயற் படவேண்டும் என்றொரு யோசனையை மங்கள தெரிவித்திருக்கின்றார். அது தொடர்பாக ஆராய்ந்து தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இரு கட்சிகளின் சார்பில் இரு குழுக்களை அமைக்க முடிவுசெடுக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு மிகவும் வெற்றிகரமாக முடிவுற்றதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இரு குழுக்களை அமைத்து இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படும் என்று ஐ.தே.கட்சி நேற்றுத் தெரிவித்தது. (சி)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குஉதவி வழங்கும்நாடுகளின்இணைத் தலைமை தீர்மானித்துள்ளது.

இலங்கையின் சமாதானச் செயற்பாடு கள் தொடர்பாக எதிர்காலத்தில் கூட்டு அறிக்கைகளை வெளியிடுவ தில்லை எனவும் இணைத் தலைமை பிரதிநிதிகள் அங்கு தீர்மானம் மேற்கொண்டனர்.

ஜனாதிபதி அண்மையில் ஜெனிவா நகரில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் மற்றும் நோர்வேயின் சர்வதேச விவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்த வேளையில், விடுதலைப் புலிகளுட னான் தொடர்பாடல் களை ஒஸ்லோவிலிருந்தவாறே தொலைபேசி மூலம் மேற்கொள்லாமென அவர்களுக்குக் கூறிய ஆலோசனையின் பிரதிபலிப்பை வெளிப்படுத்து முகமாகவே இணைத்தலைமை இவ்வாறான தொரு தீர்மானத்திற்கு வந்துள்ளது என்று சில வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது சம்பந்தமாக 'லங்காதீப' நாளிதழ் நேற்று வெளியிட்ட செய்தியில், நோர்வேப் பிரதிநிதிகள் கிளிநொச்சி செல்வதற்கு வேண்டிய பாதுகாப்பு மற்றும் ஹெலிக்கொப்டர் வசதிகளை வழங்கக் கோரும் உத்தியோக பூர்வ அறிவிப்பு இணைத்தலைமைகளிடம் இருந்து அடுத்தவாரம் இலங்கைக்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தினக்குரல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'தினக்குரல்' செய்தியாளர்மோகன் அங்குசென்றுள்ளார்.

தனியார் பஸ்ஸில் சென்ற மோகன் ஹில்டன் ஹோட்டலின் முன் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இறங்கி கால் நடையாக ஜனாதிபதி செயலகம் நோக்கிச் சென்றுள்ளார். ஹில்டன் ஹோட்டல் சுற்று வட்டத்திற்கு அருகில் உள்ள பௌத்த விகாரைக்கு அருகில் சென்றுகொண்டிருந்தபோது மோகனை விமானப்படையின் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் வைபவம் தொடர்பான செய்திகளைத் திரட்டுவதற்குச் செல்வதாகக் கூறி அதற்கான அழைப்பிதழ் மற்றும் அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை என்பவற்றை படையினரிடம் அவர் காண்பித்துள்ளார்.

எனினும், அவை உதாசீனப்படுத்தப்பட்டு மோகன் தாக்கப்பட்டார். அதன்பின் விமானப்படையினர் அவரை கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். ஊடகவியலாளர் அமைப் புகள் இது குறித்துக் கண்டனம் தெரிவித்த தோடு தலையிட்டதைத் தொடர்ந்து நேற்றிரவு அவர் விடுவிக்கப்பட்டார்.

விமானப்படையினரால் தாக்கப்பட்ட ஊடகவியலாளர் மோகன் நேற்றுமுன்தினம் காலிமுகத் திடலுக்கு அருகில் வைத்து விமானப்படைச்சிப்பாய் ஒருவரால் விசாரிக்கப்பட்டு மிரட்டப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## குற்றவியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிசெய்யும் இச்சட்டத்தை மீளக்கொண்டு வருவதற்கான முன்னேற்பாடாக இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இம்முயற்சிக்கு சில அமைச்சர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கும் விடயம், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு தள்ளிவைக்கப்பட்டதாக அறியவந்தது.

மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தை நீதி அமைச்சர் டிலான் பெரேரா நேற்றுமுன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பித்தபோது அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், கலாநிதி சரத் அமுனுகம, தினேஷ் குணவர்தன ஆகியோர் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து கருத்துகளை வெளியிட்டனர்.

இச்சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என அமைச்சர்கள் கூட்டத்தில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் வற்புறுத்தினர் என தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இச்சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

சில அமைச்சர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் இது தொடர்பான முடிவை மீண்டும் அடுத்த வாரம் கூடும் அமைச்சரவை எடுக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது. (சி)

## தமிழர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது விடயத்தில் நான் நம்பிக்கை உள்ள வனாகவே இருக்கிறேன். ஏனெனில் அரசாங்கம் தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கும் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கும் என நம்புகிறேன். தமிழர் தரப்பிலும் அது நிகழும் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. - என்றார் பௌச்சர்.

### சொல்ஹெய்ம் சொன்னது

இதேவேளை, இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் முடிவுற்ற பின்னர் ஒஸ்லோவில் ஒளிபரப்பாகும் 'ரிவி -2' தொலைக்காட்சிக்கு செவ்வி அளித்த நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம் - அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையிலான தீர்வு ஒன்றை இலங்கையில் கொண்டுவர முடியும் என்பதில் தான் நம்பிக்கையற்றவனாக இருப்பதாகத் தெரிவித்தார்.

ஒஸ்லோ பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் அமெரிக்க ராஜாங்க உதவி அமைச்சர் பௌச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறை ஒரு தீர்வாகாது. மோதலில் ஈடு பட்டிருக்கும் இரண்டு தரப்புகளும் போர்க் களத்தில் ஈட்டுகின்ற வெற்றிகள் தற்காலிகமானவையே. நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்கு அவை உதவப்போவதில்லை. தரப் புகளை மீண்டும் பேச்சு மேசைக்கு கொண்டு வருவதற்கான ராஜதந்திர முயற்சிகளில் நாம் இப்போது ஈடுபட்டிருக்கின்றோம். இராணுவ நடவடிக்கைகளின் வாயிலாக இப்பிணக்குக்கு பரிகாரம் கண்டுவிடலாம் என்ற கூற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை. இராணுவ நடவடிக்கைகளின் வாயிலாக இப்பிணக்குக்கு பரிகாரம் கண்டுவிடலாம் என்ற கூற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை - என்று வலியுறுத்தியுள்ளார்.

''போர்க் களத்தில் இரு தரப்புகளுக்கும் தற்காலிக வெற்றிகள் கிட்டலாம். இவை அரசியல் தீர்வு ஒன்றை ஈட்ட உதவப்போவதில்லை. நிரந்தர சமாதானத்துக்கு இது வழிசமைக்காது'' - என்றார். (அ)

## TENDER NOTICE

**National College of Education Kopay**
**Repairs to Buildings**

01. The Jaffna National College of Education will receive sealed bids for the repair of buildings.
02. Tenders are here by invited from the specialist contractors who are registered with the Institute for Construction Training and Development (ICID) with the grade of M 6 and above for repairing on the followings.

| Item | Serial No | Details of Repair works |
|---|---|---|
| 01. | JNCOE/E/1 | Repair work to the Administration Block |
| 02. | JNCOE/E/2 | Repair work to the Library |
| 03. | JNCOEIE/3 | Repair work to the Computer Room |
| 04. | JNCOEIE/4 | Repair work to the Kalvi Koddam (Lecturer Hall) |

Non refundable tender fee Rs :1000/-
Bid security Rs :-20500/-

Tender documents and the details of works particulars could be obtained from the president's office of the Jaffna National College of Education from 5th of July 2007 to 16th of July 2007 till 1 p.m. during working hours of weeks days. Duly completed tender documents with sealed cover could either be sent by registered post to reach the following address or deposited in the tender box kept at the same office not later than 1.00 PM on 25th of July 2007. Tenders will be opened immediately after on same day and the tenderers or their authorized representative could be present at the time of opening. Sealed tenders should be marked serial number and name of the repair work on the top of the left hand comer of the envelop.

All tenderers are strongly advised to visit the site and be fully acquainted with the exiting sites condition. All technical instructions could be obtained from the president or from his representative.

The Chainnan of the tender board reserve the right to accept any tender or to reject any or all tenders with out giving any reason and its decision will be final and conclusive.

*Chairman*
*Tender Board*
*Jaffna National College of Education*
*Kopay.*
*01.07.2007*

(சி-52788)

## மரண அறிவித்தல்கள்



### யோ. சத்தியேந்திரா

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலையைச் சேர்ந்த சத்தியேந்திரா (**Quantity Surveyor**) 28.06.2007 வியாழக்கிழமை சார்ஜாவில் காலமானார்.

அன்னார் **Dr.** யசந்தாவின் (தேசிய வைத்தியசாலை, களு போவில) அன்புக் கணவரும் மயூரனின் பாசமிகு தந்தை யும், இளைப்பாறிய அதிபர் யோகசிங்கம் தம்பதியரின் இரண்டாவது புத்திரனும் திருமதி ராதா செல்வரத்தினம் (ஆசிரியை, ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாசாலை), பாலேந்திரா (பிரான்ஸ்), சுபத்திரா (மாவட்ட இணைப்பாளர், ஒக்ஸ் பாம், மட்டக்களப்பு), **Dr.** உருத்திரா (ஆதார வைத்தியசாலை - திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சன் (தலைவர், அச்சுவேலி மினிபஸ் சங்கம் - கோலா பஸ் உரிமையாளர்), திருமதி பிரேமினி (பிரான்ஸ்), ஜெயக்குமார் (செயற்றிட்ட இணைப்பாளர், ஒக்ஸ் பாம் - மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும் அருட்குமரன், ஆரபி, சாகித்தியன் ஆகியோரின் ஆசை மாமனும், விதுரன், சுபாங்கி ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு.* (62316)

தகவல்:
**சி. செல்வரத்தினம் (மைத்துனர்).**

### நாகநாதி பொன்னம்பலம்

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி பொன்னம்பலம் நேற்று (28.06.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் கண்ணதாஸன், சதீஸ்குமார், யோகிதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இளையதம்பி, தம்பாப்பிள்ளை, மகேஸ்வரி, தனம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சங்கானை விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*சிலம்புப் புளியடி,*
*சங்கானை.*

தகவல்:
**கண்ணதாசன் (மகன்).**


**கணக்கீடு**
P. பகீரதன்
A/L 2008
வருமான செலவு கணக்கு
Sat., Sun - 2.15 p.m.
3.15 p.m.
ஆரம்பம்
Sat. 2.15 p.m.
***Business College***
முதலாம் குறுக்குத் தெரு, யாழ்.
(மத்திய கல்லூரி அருகில்).
(62255)

**A.L - 2009 & 08**
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகளும் ஆங்கிலமும்
* Tamil Mr.s. சிவா B.A.
09 பிரிவு II ஆரம்பம்
Sun 01 / 7 - 1 p.m.
(sat, sun 1 p.m.)
* Chris. Mrs. A. மல்லிகா B.A.
* Log. Miss N. சசிகலா B.A.
* Geo. Mr. T. நீகன் B.A.
* Drama - ஆசிரியர்
**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
(62307)

**அறிவொளி நல்லூர்**
ஆரம்பம் - வர்த்தகப்பிரிவு
**A/L 2008, 2009**
*30.06.2007 (சனிக்கிழமை) 2.30* p.m.
பொருளியல் R. அருணன்
கணக்கீடு Mr. இராசுகி
வணிகக்கல்வி T. பாலகிருஷ்ணன்
(தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்).
(62318)

**A/L - 2007 சகல துறைகளுக்குமாவ**
பொதுச் சாதாரணப் பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
சனி, ஞாயிறு 12 - 1.30
ஆரம்பம் : 30.06.2007 சனி 12
D.M.I. யாழ்ப்பாணம்.
(62327)

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**
★ மாகாணப் பட்டதாரி ஆசிரியர் தெரிவு
★ மாகாண முகாமைத்துவ உதவியாளர் தெரிவு. சனி, ஞாயிறு 9 - 12
ஆரம்பம் : 30.06.2007 சனி காலை 9
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக).
(62326)

**NIIT**
ஆசியாவின் மிகப்பெரிய கணனிப் பயிற்சி நிறுவனமாக விளங்கும் NIIT ன் ஊடாகச் சர்வதேசப் பல்கலைக்கழகங்களின் தகவல் தொழில் நுட்ப BSc. பட்டத்தை 3 வருடங்களில் பெறுவதற்கு இன்றே NIIT ல இணையுங்கள். (இவ்வாரம் புதிய பிரிவு ஆரம்பமாகிறது.) குறுகியகாலக் கற்கை நெறிகளிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.
A Degree from a Leading University
↑ 1 Year
e-Technology Software Engineer
↑ 1 Year
Object Oriented Application Programmer
↑ 6 Months
Web Programmer
↑ 6 Months
After O/Ls or A/Ls
விபரங்களுக்கு. NIIT, 347 ½ Kasthuriyar Road, Jaffna.
T.P. 021 222 7250 www.niit.com
(சி-52780)


## TENDER NOTICE

**National College of Education Kopay**
**Repairs to Buildings**

01. The Jaffna National College of Education will receive sealed bids for the repair of buildings.
02. Tenders are here by invited From the specialist contractors who are registered with the Institute for Construction Training and Development (ICTD) with the grade of M 7and above for the repairing on the followings.

| Item | Serial No | Details of Repair works |
|---|---|---|
| 01. | JNCOE/E/5 | Repair work to the Assembly Hall |
| 02. | JNCOE/E/6 | Repair work to the President Quarters |
| 03. | JNCOE/E/7 | Repair work to the Girls Hostel |
| 04. | JNCOE/E/8 | Repair work to the Kitchen |

Non refundable tender fee Rs. 1000/-
Bid security Rs 21,000/-

Tender documents and the details of works particulars could be obtained from the president's office of the Jaffna National college of Education from 5th of July 2007 to 16th of July 2007 till 1 p.m. during working hours of weeks days. Duly completed tender documents under sealed cover could either be sent by registered post to reach the following address or deposited in the tender box kept at the same office not later than 1.00 P.m. on 25th of July 2007. Tenders will be opened immediacy after on same day and the tenderers or their authorized representative could be present at the time of opening.

Sealed tenders should be marked serial number and name of the repair work on the top of the left hand corner of the envelop. All tenderers are strongly advised to visit the site and be fully acquainted with the exiting sites condition. All technical insttuctiolIS could be obtained ftom tlle president or from his representative.

The Chairman of the tender board reserves the right to accept anyone tender or to reject any or all tenders with out giving any reason and its decision will be final and conclusive.

*Chairman*
*Tender Board*
*Jaffna National College of Education*
*Kopay.*
*01.07.2007*

(சி-ஐ6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.